


ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்,
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்

ஆசிரியர் : பி வீரராகவன்

ஆண்டுச் சந்தா ரூ. 5] [தனி இதழ் 50 ந. பை.

மலர் 33 | ஜூலை 1969 | இதழ் 7

# மனித சமுதாயத்தின் மாபெரும் சாதனை

**உலக வரலாற்றின் ஒப்பற்ற திருநாள்**

1969 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 21ஆம் நாள், உலக வரலாற்றில் ஈடு இணையற்ற திருநாள் என்னும் சிறப்பைப் பெற்றுவிட்டது.

மனித சமுதாயம் நீண்ட நெடுங்காலமாகக் கண்டுவந்த கனவு அன்றைய தினம்தான் நனவாகியிருக்கிறது.

இந்த மண்ணுலகில் மட்டுமே இதுவரை பதிந்துவந்த மனிதனின் காலடிச் சுவடிகள், அன்றையதினம்தான் முதல்முறையாக விண்ணுலகில் உள்ள வெண்ணிலாவில் பதிந்திருக்கின்றன.

மனிதன் இந்த உலகத்திலிருந்து புறப்பட்டு, இன்னோர் உலகத்திற்குச் சென்று, அங்குள்ள காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் நேரில் கண்டுவிட்டு, மீண்டும் இந்த உலகத்திற்குப்பத்திரமாக வந்துசேர்ந்துவிட முடியும் என்னும் மாபெரும் உண்மை, அன்றையதினம்தான் நிலை நாட்டப்பட்டிருக்கிறது.

மனிதனுடைய அறிவும் ஆற்றலும் எத்தகைய மகத்தான செயல்களைச் சாதிக்கமுடியும் என்பது, அன்றைய தினம் எழிலும் ஏற்றமும் மிகுந்த முறையில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆம்! அன்றையதினம் தான் ஐக்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த **நீல் ஆர்ம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின்** ஆகிய இரண்டு விண்வெளி வீரர்கள், அம்புலியில் இறங்கி, ஏறத்தாழ மூன்று மணி நேரம் வீர உலா வந்திருக்கிறார்கள்.

இந்த மண்ணுலகில் இதுவரை கோடானுகோடி மக்கள் பிறந்திருக்கிறார்கள்; வாழ்ந்திருக்கிறார்கள்; மறைந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவருக்கும் கிடைக்காத பெரும்பேறு, இம்மாவீரர்கள் இருவருக்கும் கிடைத்திருக்கிறது. வெண்ணிலாவை நேரிற்சென்று கண்டு அதிலேயே நடந்து பெரும்பேற்றை, மனித குல வரலாற்றிலேயே முதல் முதலாக இவர்கள் இருவரும்தான் பெற்றிருக்கிறார்கள்.

வெண்ணிலாவில் தன் கால் சுவடுகளைப் பதித்த முதல் மனிதர் என்னும் பெயர், நீல் ஆர்ம்ஸ்ட்ராங் அவர்களுக்கும், அவ்வாறு செய்த இரண்டாவது மனிதர் என்னும் பெயர் எட்வின் ஆல்ட்ரின் அவர்களுக்கும் கிடைத்துவிட்டன.

அவர்கள் இருவருக்கும் ஏற்பட்டுவிட்ட இந்தப் பெரும் புகழ், இந்த உலகம் உள்ள வரையில், இந்த உலகத்தில் இறுதி மனிதன் ஒருவன் இருக்கும் வரையில் அழியாத ஓவியமாக நிலைத்துநிற்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.

## ஜூலை 16-இல் தொடங்கிய பயணம்

ஐக்கிய அமெரிக்காவில் கென்னடிமுனை என்னும் இடத்தில் அமைந்துள்ள விண்வெளிப் பயணத் தளத்திலிருந்து, அப்பல்லோ 11 என்னும் பெயர் படைத்த விண்வெளிக் கப்பலைத் தன்னகத்தேகொண்ட

சாட்டர்ன் 5 என்னும் பிரம்மாண்டமான ராக்கெட், ஜுலை 16ஆம் நாள் புதன்கிழமை இரவு 7 மணிக்கு வான் நோக்கிச் செலுத்தப்பட்டது.

அந்த மாபெரும் ராக்கெட்டின் உயரம் 363 அடி. அந்த ராக்கெட்டைச் செய்து முடிப்பதற்கு ஆன செலவு 130 கோடி ரூபாய்.

வியக்கத்தக்க பேராற்றல் படைத்த இந்த ராக்கெட், பூமியிலிருந்து ஏறத்தாழ 16,000 மைல் உயரத்தில் போய்க்கொண்டிருந்தபோது அதன் கடைசிக் கட்டத்திலிருந்து அப்பல்லோ என்னும் தாய்க் கப்பல் பிரிந்து. அதே ராக்கெட்டில் இருந்த ஈகிள் என்னும் நிலாக் கப்பலுடன் இணைந்து, இந்த நிலையில் பயணத்தைத் தொடர்ந்து நடத்தலாயிற்று. அப்போது விண்வெளிக் கப்பலின் வேகம், வினாடிக்கு 15,000 அடி.

பூமியிலிருந்து புறப்பட்ட பதினைந்தாவது மணி முடிவதற்குள், விண்வெளிக் கப்பல், 82000 மைல் உயரத்திற்குச் சென்றுவிட்டது.

புதன் இரவு புறப்பட்ட கப்பல், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நான்கு நாட்களும் தொடர்ந்து பயணம் செய்தது.

மண்ணுலகிலிருந்து வெண்ணிலாவுக்கு உள்ள தொலைவு, ஏறத்தாழ இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மைல். இந்த நீண்ட நெடுந் தொலைவை நான்கு நாட்களில் கடந்து முடித்த அவ்விண்வெளிக் கப்பல், ஞாயிறன்று சந்திரனை நெருங்கி, அதனைச் சுற்றி வலம் வரத் தொடங்கியது.

'கொலம்பியா' என்னும் பெயர் படைத்த அந்த அப்பலோ தாய்க் கப்பல் அவ்வாறு பதினோராவது முறையாக வெண்ணிலாவை வலம் வந்துகொண்டிருந்தபோது, அதுவரை அதனோடு இணைந்திருந்த ஈகிள் என்னும் நிலாக் கப்பல் அதிலிருந்து தனியாகப் பிரிந்தது. அப்போது மணி இரவு 11—17.

விண் வெளிக் கப்பலில் பயணம் செய்த மாவீரர்கள் மூவரில். மைக்கேல் காலின்ஸ் என்பவர்மட்டும் தாய்க் கப்பலிலேயே தங்கி விட்டார். அந்தக் கப்பல் தொடர்ந்து சந்திரனைச் சுற்றி வலம் வரலாயிற்று.

தாய்க் கப்பலிலிருந்து நிலாக்கப்பல் தனியாகப் பிரிவதற்கு முன்னரே, நீல் ஆர்ம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின் ஆகிய ஏனைய வீரர்கள் இருவரும் நிலாக் கப்பலுக்கு மாறிவிட்டிருந்தனர்.

அவர்கள் இருவரையும் தாங்கிக் கொண்டு தனியே பிரிந்த நிலாக் கப்பல், ஏறத்தாழ இரண்டரை மணி நேரத்திற்குப் பிறகு—ஜூலை 21ஆம் நாள் திங்கட்கிழமை விடியற்காலம் 1-47 மணி அளவில் வெண்ணிலாவில் மெதுவாக இறங்கியது. எந்த இடத்தில் இறங்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருந்ததோ அந்த இடத்தில், சிறிதளவும் பழுதின்றி, அது முறைப்படி இறங்கியது.

## வெண்ணிலாவில் கண்ட வியத்தகு காட்சிகள்

வெண்ணிலாவில் நிலாக் கப்பல் இறங்கியதும் புழுதி பறந்தது. இரண்டு நிமிடங்களில் புழுதி அடங்கிவிட்டது.

சந்திரமண்டலத்தில் நிலாக் கப்பல் இறங்கியதும் அதனுடைய அழுத்தத்தால் வெண்ணிலாவின் தரையில் பெரிய பள்ளம் ஏற்பட்டு விடும் என்று இதற்கு முன் கருதப்பட்டுவந்தது. ஆனால் நடைமுறையில் அத்தகைய பள்ளம் எதுவும் ஏற்படவில்லை. ஓர் அங்குல அளவுக்குத் தான் தரையில் அழுத்தம் ஏற்பட்டிருந்தது.

ஏறத்தாழ ஆறு மணி நேரம் விண்வெளி வீரர்கள் இருவரும் நிலாக் கப்பலிலேயே தங்கியிருந்து, உணவருந்தினர்; ஓய்வு எடுத்துக்கொண்டனர்; பலகணி வழியாக வெண்ணிலாவின் தரைப் பரப்பைக் கண்டு மகிழ்ந்தனர்.

ஆறுமணி நேரத்திற்குப் பிறகு—அதாவது காலை மணி 8-26 க்கு —வீரர் ஆர்ம்ஸ்ட்ராங், நிலாக் கப்பலுக்கு வெளியே வந்து, அதில் பொருத்தப்பட்டிருந்த ஓர் ஏணியின் வழியாக இறங்கி, நிலாவின் தரையில் தன் இடது காலை முதலில் வைத்து நடந்தார். அவர் இறங்கி இருபது நிமிடங்கள் ஆன பிறகு, ஆல்ட்ரின் என்னும் பெயருடைய மற்றொரு வீரரும் நிலவின் தரையில் இறங்கி நடக்கலானார்.

முதன் முதலாக வெண்ணிலாவில் கால்வைத்து முதல் அடியை எடுத்து வைத்த ஆர்ம்ஸ்ட்ராங், "இது மனிதன் ஒருவனுக்கு மிகச் சிறிய அடியாகும்; ஆனால் மனித குலத்திற்கோ மாபெரும் பாய்ச்சல் ஆகும்" என்று குறிப்பிட்டார்.

நிலாக் கப்பலின் நிழலில், அதனுடைய நான்கு கால்களில் ஒன்று தரையைத் தொட்டுக்கொண்டு நிற்பது. அதில் பொருத்தப்பட்டுள்ள ஏணி, அந்த ஏணியின்கீழ் ஆர்ம்ஸ்ட்ராங் நிற்பது, அதன்பின் ஆல்ட்ரின் நடந்துவந்தது ஆகிய எல்லாக் காட்சிகளும் பூமியில் உள்ளவர்களுக்கு டெலிவிஷன் மூலம் மிகத் தெளிவாகத் தெரிந்தது.

சந்திரனிலிருந்து பார்க்கும்போது பூமி வட்டவடிவமாக—பெரிதாக—மிக அழகாகத் தெரிகிறது என்றும், சந்திரனின் தரையில் உள்ள மண் கரிப்பொடிபோலச் சன்னமாக இருக்கிறது என்றும், ஆனால் தோண்டியெடுத்தால் பசைபோல ஒட்டிக் கொள்கிறது என்றும், சந்திரனில் பல வண்ணங்களில் பாறைகள் காணப்படுகின்றன என்றும், சந்திரனின் தோற்றம் அமெரிக்காவில் உள்ள பெரிய பாலைவனத்தைப் போலக் காட்சி அளிக்கிறது என்றும் ஆர்ம்ஸ்ட்ராங் டெலிவிஷன் மூலம் பூமியில் உள்ள விண்வெளித் தள அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

''பாறைகளின் மேல் பகுதியில் பொடிபோல் தூசி படர்ந்து உள்ளது அதனால் பாறைகள் வழுக்குகின்றன என்றாலும் அவற்றின் மீது ஏற முடிகிறது'' என்று தெரிவித்தார் மற்றொரு வீரரான ஆல்ட்ரின்.

வீரர்கள் இருவரும் நிலாவில் நடந்துசென்றது, தாவித்தாவிக் குதித்துச் செல்வதுபோல, கங்காருவின் நடைபோல, பூமியில் உள்ளவர்களுக்கு டெலிவிஷனில் தோன்றியது.

ஆர்ம்ஸ்ட்ராங், டெலிவிஷன் காமிராமூலம், நிலாக் கப்பலைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்தார், அதன்பின் வெண்ணிலாவுக்கு அவர்கள் சென்றதைக் குறிக்கும் நினைவுச் சின்னம் ஒன்றை ஆர்ம்ஸ்ட்ராங் திறந்துவைத்தார்.

''பூமியிலிருந்து வந்த மனிதர்கள் இங்குதான் அம்புலிமேல் முதலில் அடிவைத்தார்கள். கி பி. 1969 ஜூலை, மக்கள் குலம் முழுவதற்கும் அமைதிகாண நாங்கள் வந்தோம்'' என்னும் சொற்களே அந்நினைவுச் சின்னத்தில் பொறிக்கப்பட்டிருப்பவை.

அச் சின்னத்தில் மூன்று விண்வெளி வீரர்களின் கையெழுத்துக்களும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் நிக்சனின் கையெழுத்தும் அமைந்துள்ளன.

இச் சின்னத்தைத் திறந்துவைத்த பின், வீரர்கள் இருவரும், அமெரிக்கக் கொடி ஒன்றை வெண்ணிலாவில் பறக்கவிட்டார்கள்; விஞ்ஞானக் கருவிகள் பலவற்றையும் பொருத்தினார்கள். பூமிக்குத் திரும்பியபின் விஞ்ஞானிகளால் ஆராய்ச்சி செய்யப்படுவதற்காகச் சந்திரனின் பாறைகள், மண், மணல் முதலியவற்றிலிருந்து மாதிரிக்கு ஓரளவு வெட்டி எடுத்துக்கொண்டார்கள்.

சந்திரனில் இருவரும் உலாவியபோது, அமெரிக்கத தலைவர் நிக்சன், ரேடியோ டெலிவிஷன் மூலம் அவர்களுடன் உரையாடி, அவர்களுக்குத் தன் இதயம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டார். அவர்கள் ஆற்றிமுடித்த அரும்பெரும் செயலின் விளைவாக விண்ணுலகங்கள் மண்ணுலகின் ஒரு பகுதியாக மாறிவிட்டன என்று, நிக்சன் அப்போது மிக்க பெருமிதத்தோடு அவர்களிடம் குறிப்பிட்டார்.

பிராண வாயுவைத் தம்மிடம்கொண்ட சிப்பங்களை முதுகில் கட்டிக்கொண்டு அவர்கள் இருவரும் ஏறத்தாழ மூன்று மணி நேரம் இவ்வாறு வெண்ணிலாவில் உலாவந்துவிட்டு, பகல் 11-21க்கு நிலாக் கப்பலுக்குத் திரும்பினர்.

ஏறத்தாழப் பன்னிரண்டு மணிநேரம் நிலாக் கப்பலில் தங்கி இருந்துவிட்டு, இரவு 11-25க்கு அக் கப்பலை இயக்கி அதனை அம்புலியிலிருந்து மேலே புறப்படச் செய்தனர். சந்திரனைச் சுற்றும் வட்டப் பாதையில் நிலாக் கப்பல் வெற்றிகரமாக நுழைந்தது.

நிலாப் பயணத் திட்டத்திலேயே நிலாத் தரையிலிருந்து நிலாக் கப்பல் கிளம்புவதுதான் மிகவும் அபாயம் நிறைந்த கட்டமாகும். அக் கட்டத்தின்போது ஏதாவது கோளாறு நடந்திருந்தால், புறப்படத் தவறியிருந்தால், இரு வீரர்களும் சில மணி நேரத்திற்குப் பிறகு இறந்து விட்டிருப்பர். ஆனால் கோளாறு எதுவும் நேரிடவில்லை. நிலாக் கப்பலின் எஞ்சின் தலை சிறந்த முறையில் வேலை செய்தது; நிலாக் கப்பல் திட்டமிட்ட நேரத்தில் திட்டமிட்ட முறைப்படிபுறப்பட்டது.

கிட்டத்தட்ட மூன்றரை மணி நேரத்திற்குப் பிறகு, வெண்ணிலாவைச் சில முறை சுற்றிவிட்டு, நிலாக் கப்பல், அதுவரை வெண்ணிலாவைத் தொடர்ந்து சுற்றிக் கொண்டிருந்த தாய்க் கப்பலுடன் இணைந்தது. இணைந்த பின்னர், நிலாக் கப்பலிலிருந்த இரு வீரர்களும் தாய்க் கப்பலுக்கு மாறி விட்டனர். மாறியபின், நிலாக் கப்பல் இனித் தேவையில்லை என்ற காரணத்தால் தனியே பிரிக்கப்பட்டு வான வீதியில் விடப்பட்டு விட்டது. தாய்க் கப்பல் மட்டும் மூன்று வீரர்களுடன் பூமியை நோக்கி வரத் தொடங்கியது.

## திரும்பிவந்தனர் வீரர்கள்-! வாழ்த்தி மகிழ்ந்தது மக்கட்குலம் !

வெண்ணிலாவில் வெற்றிகரமாக இறங்கி, அமெரிக்க நாட்டிற்கும் மானிட சமுதாயத்திற்கும் அழியாத பெரும் புகழை ஈட்டிக் கொடுத்த அவ் விண்வெளிக் கப்பல், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாட்களும் பயணம் செய்து, இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மைல் தொலைவையும் கடந்து, வியாழன் அன்று இரவு 10-20 மணிக்குப் பூமியை அடைந்தது. ஹவாய்த் தீவிலிருந்து 900 மைல் தொலைவில், பசிபிக் கடலில், தலைகீழாக இறங்கிய விண்வெளிக் கப்பல், சிறிது நேரத்திற்குப் பின் நேராக நிமிர்ந்து நின்றது. அது கடலில் இறங்கு

வதை முதலில் ஒரு ஹெலிகாப்டர் விமானம் கண்டறிந்தது. பின்னர் ஒரு செய்திப் போக்குவரத்து விமானம் அதைக் கண்டு அறிந்து செய்தியை, உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்தது.

ஹெலிகாப்டர் ஒன்றில் விண்வெளிப் பயணிகள் மூவரும் ஏற்றப்பட்டு, சற்றுத் தொலைவில் ஆயத்தமாக நின்று கொண்டிருந்த ஹார்னட் என்னும் போர்க் கப்பலுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பிறர் எவரும் சந்திக்கமுடியாதபடி பதினெட்டு நாட்கள் அவர்கள் தனியாக வைக்கப்பட்டு, விரிவான மருத்துவப் பரிசோதனைக்கு ஆளாக்கப்படுவர். சந்திர மண்டலத்திலிருந்து அவர்கள் உடலில் ஏதேனும் கிருமிகள் தொற்றிக் கொண்டு வந்துள்ளனவா என்பதைத் திட்டவட்டமாக ஆராய்வதே இந்த ஏற்பாட்டின் நோக்கம்.

விண்வெளிப் பயணிகள் மூவரும், இடையூறு எதுவுமின்றி, தங்களுடைய சந்திர மண்டலப் பயணத்தை வெற்றியுடன் முடித்துக் கொண்டு நலமுடன் திரும்பியது குறித்து, உலகத் தலைவர்கள் யாவரும் தங்கள் மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். மனித சமுதாயம் முழுவதும் களிப்புக் கடலில் நீந்தித் திளைத்தது.

ஜூலை 16 புதன் கிழமை இரவு 7 மணிக்குத் தொடங்கிய விண்வெளிப் பயணம், ஜூலை 24 வியாழக்கிழமை இரவு 10-20 மணிக்கு முழு வெற்றியுடன் முடிவுற்றதுகண்டு, அமெரிக்கச்சமுதாயமும் மக்கள் குலமும் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதில் வியப்பென்ன இருக்கமுடியும் ?

உலகமெல்லாம் பரவிப் பெருகியுள்ள இம் மகிழ்ச்சி வெள்ளத்தில் "**ஆரம்பக் கல்வி**"யும் தன் இதயம் நிறைந்த மகிழ்ச்சியை இணைத்துக் கொள்ள விழைகிறது.

*வரலாறு காணாத விண்வெளிப் பயணத்தை வியத்தகு முறையில் நிறைவேற்றித் தந்த விண்வெளி வீரர்கள்,*

அவர்களுடைய பயணம் சிறப்புற அமைவதற்குத் தேவையான எல்லா வகைக் கருவிகளையும் ஏற்பாடுகளையும் செவ்வனே அமைத்துத் தந்த எண்ணற்ற விஞ்ஞானிகள்,

அந்த விஞ்ஞானிகளின் அரிய கருத்துக்களுக்கு நடைமுறை வடிவம் கொடுத்து நற்பணி புரிந்த ஆயிரக்கணக்கான தொழில் துறை வல்லுநர்கள்,

ஆகிய அனைவருக்கும் "ஆரம்பக் கல்வி" இதழ், தன் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

வாழ்க வாழ்க அப் பெருமக்கள் அனைவரும் !

வெல்க வெல்க அவர்கள்தம் இத்தகு முயற்சிகள் !

# அறிவமுதம்

## [ தொகுப்பு : அரியநகர் "புகழ்" ]

*

நான் படிக்காத புத்தகத்தை எனக்குக் கொண்டு வந்து தருபவன் தான் என் சிறந்த நண்பன்.

—ஆபிரகாம் லிங்கன்

உங்களுடைய கல்வி, தூய்மை, உண்மை என்ற வலிவான அடிவாரத்தில் கட்டப்பெறுதல் வேண்டும்.

—காந்தியடிகள்

வாழ்க்கை நிலைகளை நல்ல வகையில் ஒழுங்குபடுத்தி நடத்தும் வல்லமையே கல்வியாகும்.

—சான்கிபன்

கல்வியின் தலையாய குறிக்கோள் அறிவு அன்று; நல்ல நடத்தையே.

—எர்பர்ட் ஸ்பென்சர்

அறிவு படைத்ததின் முடிவான நோக்கம் ஒழுக்கத்தை வளர்ப்பதேயாகும்.

—காந்தி

ஒரு நாட்டின் மேன்மையும் தாழ்மையும் அந்நாட்டின் இளைஞர்களிடத்தில் தானிருக்கின்றன.

—சுபாஸ் சந்திரபோசு

ஒரு பெரிய நூலை மிக விரைவாய்ப் படித்து முடித்தலினும், ஒரு பக்கத்தை நன்ருகப் படித்து அறிவு பெறுதலே சிறந்தது.

—மெக்காலே

தாய் மொழியைத் திறமையாகப் பயன்படுத்த அறியாத எவனும் பிற மொழியைத் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளக் கற்றுக் கொள்ளுதல் கடினம்.

—பெர்னுட்ஷா

கல்வியை மரபுவழி உரிமையாக எவனும் பெறமுடியாது; தனது சொந்தப் பயிற்சியினுலேயே ஒருவனிடம் அது வந்து சேருகிறது.

—ஓர் அறிஞர்

# மாணவர்களும் வேலை நிறுத்தமும்

[ டாக்டர் து. சுப்பராயன், பி. எஸ்ஸி., எம். பி. பி. எஸ். ]

கல்லூரி திறக்கப்படுகிறது. மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் கல்லூரிக்கு வந்து, கல்லூரியில் சேருவதற்கு விண்ணப்பம் கொடுக்கிறார்கள். அப்பொழுது "கல்லூரியில் சேரவேண்டும்" என்ற ஆர்வம், மாணவர்களுக்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தோமானால், ஆர்வம் அதிகமாக, அளவுக்கும் மீறியதாக, இருக்கிறது. இதில் ஐயமே இல்லை.

ஒரு மாணவருக்கு கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது அந்த மாணவர் அடையும் துயரம்தான் எவ்வளவு? அதை அளவிட முடியுமா? அந்த மாணவர் அடையும் ஏமாற்றம் தான் எவ்வளவு? அவர் அடையும் மனக் குமுறல் தான் எவ்வளவு? சொல்லுவதற்கு இயலுமா அதை?

கல்லூரியில் இடம் கிடைத்து விடுகிறது. சேர்ந்தாகி விட்டது. அப்பொழுது அந்த மாணவர் உள்ளத்தில் ஏற்படும் முதல் எண்ணம் என்ன? இந்த ஆண்டு நான் நன்றாகப் படிக்க வேண்டும் தேர்விலே நிறைய மதிப்பெண்கள் பெற்று என் திறமையை வெளிக்காட்டவேண்டும் என்ற எண்ணம் தான்.

கல்லூரியிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கல்லூரி திறந்ததும் ஏற்படுகின்ற ஆசை என்ன? இந்த ஆண்டு நம் கல்லூரியில் மாணவர்கள் நன்றாகப் படித்து. பல்கலைக் கழகத் தேர்வுகளில் வெற்றி பெறுபவரின் விகிதம் அதிகமாக வேண்டும். வெற்றி பெற்றவர்களும் அதிக எண்கள் வாங்கிச் சிறப்புத் தகுதி பெற வேண்டும்" என்ற ஆசைதானே.

பெற்றோருடைய ஆசை என்ன? "தங்கள் மாணவர்கள் நன்றாகப் படிக்க வேண்டும். திறமை மிக்கவர்களாக ஆகவேண்டும். அடுத்த ஆண்டு நல்ல தொழிற் கல்லூரிகளிலே சேர்ப்பிக்க வேண்டும்?" என்பதுதான்.

கல்வியிலே அக்கறை கொண்டவர்களும், அரசினரும், கல்லூரி நடத்துகின்ற பெருந்தகைகளும், விரும்புவதும் மேற்சொன்ன மேம்பாட்டைத்தானே! எண்ணமும் ஆசையும் அப்படியிருக்க, நடப்பது என்ன? அந்தோ பரிதாபம்! அதையும் பார்ப்போம்.

கல்லூரி நன்றாக நடந்துகொண்

டிருக்கிறது. மாணவர்கள் நன்ருக அக்கறையுடன் படித்து வருகிருர்கள், ஆசிரியர்கள் நன்ருகச் சொல்லிக் கொடுக்கிருர்கள்.

வருகிறது ஒரு செய்தி. செய்தித் தாளிலே அதைப் படிக்கிருர்கள் மாணவர்கள், அந்தச் செய்தி தங்களுக்குப் பாதகம் விளைவிக்கிறது என்று எண்ணுகிருர்கள். உடனே பதிலடியாக வேலை நிறுத்தம் வருகிறது. கல்லூரிக்குச் செல்லவில்லை. ஊரைச் சுற்றி வலம் வருகிருர்கள். தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் நோக்கத்தோடு தங்களைப் பாதிக்கும் நிகழ்ச்சி நீங்கும் வரை, காலவரையரையின்றி வேலை நிறுத்தம். கல்லூரித் தலைவர்கள் ஆசிரியர்கள் சொல்லுகின்ற யோசனைக்கும், புத்திமதிக்கும் செவி சாய்ப்பதில்லை. பெற்ருேர் கேட்டால் "ஸ்ட்ரைக் இன்று" என்று பதில் சொல்லி விட்டு வாளாவிருக்கிருர்கள்.

இப்பொழுது பெற்ருேர்களும், ஆசிரியர்களும், கல்வியிலே அக்கறை கொண்டோரும், ஏமாற்றத்தை அடைகிருர்கள். கல்லூரி ஆண்டு துவக்கத்தில், கல்லூரியில் இடம் கிடைக்காத மாணவர் அடைந்த ஏமாற்றத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஏமாற்றம் மிக மிகப் பெரியது. சமாளிக்க முடியாத ஏமாற்றம்.

கல்லூரியில் சேருமுன் மாணவர்கள் காட்டிய ஆர்வம் எங்கே போயிற்று? படிப்பில் திறமை பெறவேண்டும் என்ற உறுதி எங்கே போயிற்று? கல்லூரித் தலைவரிடமும், ஆசிரியர்களிடமும், பெற்ருேரிடமும் காட்டிய பக்தி எங்கே போயிற்று?

இதைச் சிந்திக்க வேண்டும் மாணவர்கள். ஆர்வம், உறுதி, பக்தி இவையெல்லாம் நிரந்தரமான பண்புகள் அல்லவா? அல்லது கானல் நீரா?

இந்த நிலைக்கு மாற்று கூறுகிறேன், கவனியுங்கள்.

மாணவர்களைப் பாதிக்கக்கூடிய செய்திகள், செய்தித் தாள்களிலே வந்தால், அவற்றிற்குப் பதிலடி, வேலை நிறுத்தம் அல்ல. இது தெளிவாகத் தெரிதல் வேண்டும். மாணவர்களுடைய எதிர்ப்பை, கிரமமான முறையில் வெளிக்காட்ட வேண்டும். ஒரு மணி நேரம் கூட்டம் நடத்த வேண்டும். பாதகத்தை விளக்கி உரைத்துப் பேசவேண்டும். தீர்மானம் இயற்ற வேண்டும். அந்தத் தீர்மானத்தை, சம்பந்தப்பட்டோருக்கும், செய்தித் தாள்களுக்கும் அனுப்ப வேண்டும் பிறகு கல்லூரிக்குச் செல்லவேண்டும். இந்தச் சரியான வழியை அனுசரிக்க, நிதானமும், சிந்தனையும், தெளிவு பெற்ற மதியும் மாணவருக்கு வேண்டும்.

வேலை நிறுத்தம் செய்யும் பொழுது, மாணவர் ஒவ்வொருவரும், தன் கடந்த கால நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்க வேண்டும் "கல்லூரியில் இடம் பெற எவ்வளவு சிரமப்

பட்டனர், பணத்துக்காக,'' என்றெல்லாம் சிந்திக்க வேண்டும்.

தேர்வுகள் வைத்தால்; அவற்றிற்குப் போகாமல் வேலை நிறுத்தம் செய்வது, தேர்வுகளே வேண்டாம் என்று சொல்லுவது, மிக மிகக் கொடுமையானது. இதை, எடுத்த காரியத்தைச் செய்யாமல் தப்பித்து ஓடிப் பதுங்குவது என்றுதான் சொல்ல வேண்டும். எவ்வளவு அருவருக்கத் தக்கச் செயல் இது என்று எண்ணிப் பார்த்தார்களோ? இப்படிச் செய்கிறார்களே; பல்கலைக் கழகத் தேர்வுகளிலிருந்து ஓடிப் பதுங்கி விட முடியுமா? யோசித்துப் பார்க்கட்டும்.

கால் ஆண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு இவையெல்லாம், பல்கலைக் கழகத் தேர்வுக்கு ஒத்திகைகள் என்று மாணவர்களுக்குத் தெரியாதா? போதுமான தயாரிப்பும் பயிற்சியும் ஆயத்தமும் இல்லாமல், தேர்வுக்குப் போனால் வெற்றி பெறுவது கடினம். தோல்விதான் கிடைக்கும் என்பது தெரியாதா?

''வருமுன்னர்க் காவாதான்
வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்''

என்று வள்ளுவர் சொல்லவில்லையா? தேர்வு வருமுன், நன்ருகப் படிக்க வேண்டும். அதற்காகத் தயார் செய்து கொள்ள வேண்டும். இந்த எடுத்த காரியத்தைச் செய்யும் முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய எதையும் நாம் செய்யக் கூடாது.

''மெய்வருத்தம் பாரார்;
பசிநோக்கார், கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும்
மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார்,
அவமதிப்பும் கொள்ளார்;
கருமமே கண்ணுயினர்!—!,

என்று இளமையில் படித்த பாட்டு மறந்து விட்டதா? இது ஏட்டுச் சுரைக்காயா? கறிச்குதவாதா? கறி சமைக்க மாட்டார்களா? கருமமே கண்ணுயிருக்க மாட்டார்களா?

நேரம் பொன்ஞனது. போனல் வராது. (Time lost is lost for ever. it will not come again. Time is golden. It is precious.) இதைப் படித்திருக்கிறேம். இதைப் புரிந்து கொண்டு, வாழ்க்கையில் அதன் படி நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறே, இனியேனும், தமிழக மாணவர் நடந்து கொள்ளுவர் என்று எதிர்பார்க்கின்றேம்.

மாணவர்கள், தங்கள் எதிர்காலத்தையும், மனக்கண் முன் கற்பனை செய்து பார்க்க வேண்டும். தேர்வுக்கு நன்ருகப் படிக்கவில்லை பல்கலைக் கழகத்தேர்வு வருகிறது. பிறகு முடிவுகள் வெளிவருகின்றன. தோல்வி ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது எவ்வளவு

கஷ்டப்பட நேரிடும்? டியுடோரியல் கல்லூரிகளில் சேரவேண்டும். பெற்றோரிடம் பணம் கேட்க வேண்டும். பணத்துக்கு அவர்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்? நினைக்கவும் நெஞ்சம் நடுங்குகிறது. டியூடோரியல் கல்லூரியில் சேர்ந்து கூட, வேலை நிறுத்தம் செய்வார்களா?

வேறு விதமாக எண்ணுவோம். மாணவர் நன்ருகப் படித்து, பல்கலைக் கழகத் தேர்விலே, சிறப்புடன் வெற்றி பெற்ருர் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது மாணவர் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லை உண்டா? ஆசிரியர்களும் பெற்ரோர்களும் எவ்வளவு மனம் பூரிப்பார்கள்? நல்ல தொழில் கல்லூரிகளிலே சேரலாம்; பட்டப் படிப்புகள் படிக்கலாம். மேம்பாடு அடையலாம் மாணவர்கள் கனவெல்லாம் நனவாகும் பொங்கும் இன்பம் எங்கும் தங்கும். இதுவே நமது மாணவரின் எதிர்காலமாக இருக்கட்டும். இதுவே, மெய்யாக மாணவரும், அவருடைய வருங்கால நல்வாழ்விற்கு பொறுப்புடைய அனைவரும் விரும்புவது.

—“நல்வழி”

---


## முக்கிய அறிவிப்பு

1969-70-ஆண்டுக்கு தொடர்ந்து எமது பாடப்புத்தகங்களை வைத்த எய்டட் ஆரம்பப் பாடசாலை(Aided El'ementary Schools) களுக்கு மட்டும் தொடர்ந்து “ஆரம்பக்கல்வி இனமாக அனுப்பிவைக்கப்படும். மற்றவர்கள் ரூ. 5/- சந்தா அனுப்பினலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குறைந்தது ரூ. 100க்குக் குறையாமல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டும். ஆர்டர்கள் அனுப்பும்பொழுது, பார்சல் அனுப்ப வேண்டிய (Railway Station) ரயில்வே நிலையத்தின் பெயர், அல்லது (T.V.S. Lorry) நிலையத்தின் பெயர் தெளிவாக எழுதவேண்டும். *மானேஜர்,*

*ஆரம்பக்கல்வி நிலையம்*

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

*94-95, புதுத்தெருவு, மண்ணடி, சென்னை-1.*

# கல்வித்துறைச் செய்திகள்

## பேசும் புத்தகம்

பார்த்துப் படிக்க முடியாத. இயலாத சிறுவர்களுக்குப் பாடம் போதிக்க மிகவும் உதவும் 'பேசும் புத்தகங்கள்' பிரிட்டனில் தயாரிக்கப்பட்டுள்ளன.

சாதாரண புத்தகங்களில் இருப்பது போலவே இதிலும் பாடங்கள் அச்சிடப்பட்டு இருக்கின்றன. அத்துடன் புத்தகத்தில் என்ன எழுதியுள்ளது என்பதை ஒருவர் விளக்கும் குரலும் அந்தந்தப்பக்கங்களிலேயே பதிவு செய்யப்பட்டிருக்கிறது—சினிமா, 'பிலிம்' படச் சுருளில் படத்தோடு ஒலியும் பதிவு செய்யப்பட்டிருப்பது போல பாட்டரியால் அது இயங்குகிறது. படிக்க முடியாத குழந்தைகளும் இதனை இயக்கிப் பாட போதனையைக் கேட்டுப் பயன்பெறலாம்.

உலகிலேயே முதல் முயற்சியாகக் கருதப்படும் இந்தப்'பேசும் புத்தகங்கள்' எளிதாக எல்லா இடத்திற்கும் எடுத்துச் செல்லக் கூடியவை.

## ஜூனியர் பேஸிக், எலிமெண்டரி கிரேடுகள்

### இந்த ஆண்டிலிருந்தே இல்லை

போதனை முறை பள்ளிகளில் ஜூனியர் பேஸிக் கிரேடும், எலிமெண்டரி கிரேடும் எடுக்கப்பட்டு விடுகிறதல்லவா? அதன் விளைவாக இந்தப் பள்ளிகளில், சென்ற கல்வியாண்டின் இறுதியிலிருந்த 55 ஜூனியர் பேஸிக் கிரேட், எலிமெண்டரி கிரேட் பிரிவுகளுள், (செக்ஷன்களுள்), 25 பிரிவுகள் அடியோடு எடுபடலாம். எஞ்சியுள்ள 30 பிரிவுகள் விஷயத்தில், ஜூனியர் பேஸிக் கிரேட் பிரிவுகள் சீனியர் பேஸிக் கிரேட் பிரிவுகளாகவும், எலிமெண்டரி கிரேட் பிரிவுகள் செகண்டரி கிரேட் பிரிவுகளாகவும் மாற்றியமைத்துக் கொள்ளப் படலாம் என்று சர்க்கார் உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கல்வியாண்டிலிருந்தே (1969-70-ம் ஆண்டிலிருந்தே) ஜூனியர் பேஸிக், எலிமெண்டரி கிரேட் பயிற்சிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை நிறுத்திவிடுவது என்று சர்க்கார் முடிவு செய்துள்ளது. இவ்விரு கிரேடுகளுக்கும் இந்த ஆண்டில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள்.

1969-70 ஆண்டில் சீனியர் பேஸிக், செகண்டரி கிரேட் வகுப்புகளில் 227 பிரிவுகளுக்கு மட்டுமே மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## பள்ளி செல்லாத ஏழைக் குழந்தைகளுக்குச் சிற்றுண்டி

### சென்னையில் புது உணவு புஷ்டிப் பணி துவக்கம்

பள்ளிகளுக்குச் செல்லாத ஏழைக் குழந்தைகளுக்கு நாள் தோறும் சிற்றுண்டி வழங்கும் திட்டம் இன்று சென்னையில் ஆரம்பமாகியது. சேவா சமாஜமும், சமூகத் தொண்டுக்கான கிறிஸ்தவ சங்கமும் இத் திட்டத்தை மேற்கொண்டுள்ளன. ''உணவுப்புஷ்டித்தேர்வுத்திட்டம்'' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

லாண்டன் தோட்டம், ஜகந்நாதபுரம், அடையாறு பகுதிகளில் குடிசைகளில் வாழும் சுமார் 400 ஏழைக் குழந்தைகளுக்கு உப்புமா, பால், பிஸ்கோத்து வகையரு பரிமாறப்பட்டன. ஆரம்பத்தில் ஒரு வருஷத்துக்கு இவ்வாறு கொடுக்கப்படும். படிப்படியாக 2000 குழந்தைகளுக்கு இத்திட்டத்தை விஸ்தரிக்கலாமென்றிருப்பதாக திருமதி கிளப்வாலா ஜாதவ் கூறினர்.

ஓராண்டுக்குக் குழந்தை யொன்றுக்கு ரூ. 12 செலவாகும். இதை நன்கொடையாக வழங்கினுல் உதவியாக இருக்குமென்று கூறினர். தரும சிந்தையுள்ளவர்கள் உதவ வேண்டுமென்றுர்.

சமூகத் தொண்டுக்கான கிறிஸ்தவ சங்கத்தின் பிராந்திய டைரக்டர் துரைராஜ், சேவா சமாஜத்தினரிடம் மோட்டார் வானை ஒப்படைத்தார்.

## பிற்பட்ட வகுப்பினர் உபகாரச் சம்பளம் : அரசு புது உத்தரவு

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிகுலேஷனுக்குப் பிந்திய படிப்புக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவது சம்பந்தமாக தமிழ் நாடு சர்க்கார் புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளனர். பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவராயினும், மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவராயிருந்தாலும் சரி, அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் 40 சதவிகிதத்துக்கு மேல் மார்க் வாங்கியிருந்தால் உபகாரச்சம்பளம் அளிக்கலாம் என்பதே இந்தப் புதிய உத்தரவாகும். இது இந்தக் கல்வி ஆண்டு (1969-70) முதல் அமலுக்கு வரும்.

50 சதவிகிதத்துக்கு அதிகமாக மார்க் வாங்கும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் 45 சதவிகிதமும், அதற்கு அதிகமாகவும் வாங்கும் மிக பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் இந்த உபகாரச் சம்பளங்கள் வழங்கலாம் என்பது இது வரை இதற்குப் பின்பற்றப்பட்ட அடிப்படையாகும்.

இந்த மார்க் அடிப்படையை மாற்றுவது பற்றிச் சர்க்கார் பரிசீலித்தனர்.

பிற்பட்ட வகுப்பினர், மிக பிற்பட்ட வகுப்பினர் என்ற வித்தியாசத்தை நீக்கி, பிற்பட்ட வகுப்பினர் அனைவருக்கும் பொதுவான ஏற்பாடு ஒன்று பின்பற்றப்பட

வேண்டும் என்று சர்க்கார் கருதுகின்றனர். இதைத் தொடர்ந்து ஒரு மாணவர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அல்லது மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி, அவர் எஸ் எஸ். எல். சி. யில் 40 சதவிகிதமும், அதற்கு அதிகமாகவும் பெற்றிருந்தால் உபகாரச் சம்பளம் வழங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சர்க்கார் இப்போது முடிவு செய்துள்ளனர்.

## 1250 பி. டி. ஆசிரியருக்கு வேலை கிடைக்கலாம்

### பள்ளிக் கல்விக் கூட்டு டைரக்டர் தகவல்

இவ்வாண்டு நமது சென்னை ராஜ்யத்திலுள்ள செகண்டரி பள்ளிகளில் அதிகப்படியாக 14 லிருந்து 17 வயது வரையுள்ள 50,000 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் பி. டி. தகுதி பெற்ற 1250 ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கலாம்.

பள்ளிக்கல்விக்கூட்டு டைரக்டர் திரு. எஸ். வி. சிட்டிபாபு இங்கு அளித்த பேட்டியில் இத்தகவலைத் தெரிவித்தார்.

ரசாயனம், பௌதிகம் ஆகிய பிரிவுகளில் பி. டி. தகுதிபெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் கணிதப் பிரிவு பி. டி. ஆசிரியர்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. சமூக இயல் பி.டி. ஆசிரியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று அவர் சொன்னார்.

கூடுதலாக 11 லிருந்து 14 வயது வரையுள்ள ஒரு லட்சம் குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, 2500 செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்க சர்க்கார் அனுமதித்துள்ளது என்றும் திரு. சிட்டிபாபு கூறினார்.

## உலகில் மொத்தம் 2796 மொழிகள்

உலகில் இப்போது 2796 மொழிகள் பேசப்படுகின்றன. லத்தீன், புராதன கிரேக்கமொழி, அரமைக் ஆகிய மொழிகள் இந்த எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை. 2796 மொழிகளில் சீனமொழி, இந்தி, உருது, ஆங்கிலம், ஸ்பானிஷ், ரஷிய, ஜெர்மனி, ஜப்பானிஷ், போர்த்துகல், பிரெஞ்சு, அராபிக், பெங்காளி, இத்தாலியன் ஆகிய 13 மொழிகளும், 5 கோடிக்கு மேற்பட்டவர்களால் பேசப்படுகிறது. இந்த மொழிகளில் 65 நாடுகளில் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. இந்த மொழிகளில் 6 மொழிகள் தெரிந்த ஒருவர் உலக மக்களில் 30 சதவிகிதம் பேருடன் பேச முடியும். இந்த 13 மொழிகளும் அறிந்திருந்தால் உலக மக்களில் மூன்றில் இரு பகுதி மக்களுடன் பேச முடியும்.

## புரட்சிகரமான அறுவடை இயந்திரம்

ஒரு தனியார் கம்பெனி தானே இயங்கும் நெல் அறுவடை இயந்திரம் ஒன்றை உருவாக்கித் தயாரித்திருக்கிறது. இது அறுவடைச் செலவைப் பாதியாகக் குறைக்கும்; சேதாரமும் இராது. இந்த யந்திரம் அறுவடை செய்வதை இன்று பேரூரில் காட்டினார்கள். இதைத் தமிழகத்தையும், கேரளத்தையும் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் கண்டனர்.

இந்தப் புதிய நெல் அறுவடை இயந்திரத்தின் வெள்ளோட்ட விழாவை சென்னைத் தொழிலதிபர் திரு. ஏ சிவசைலம் துவக்கி வைத்தார்.

இந்த இயந்திரத்தைக் கொண்டு ஒரு ஏக்கர் நெற்பயிரை சுமார் இரண்டு மணி நேரத்துக்குள் அறுவடை செய்துவிடலாம். செலவும் ரூ. 40-தான் ஆகும் இப்போது ஆட்களைக்கொண்டு செய்யும் அறுவடைக்கு ஏக்கருக்கு ரூ. 75 முதல் ரூ. 80 வரை செலவாகிறது. அறுவடையின்போது வயலிலிருந்து நெல் கட்டுகளைக் கொண்டு போவது, போரடிப்பது, தூத்துவது, சுத்தம் செய்து, தரம் பிரிப்பது ஆகியவைகளில் சாதாரணமாக 10 சதவிகிதம் சேதாரம் போய்விடுவது வழக்கம். இந்தப் புது அறுவடை இயந்திரத்தின் மூலம் அந்தச் சேதாரத்தை 3 சதவிகிதமாகக் குறைத்துவிடலாம் என்று திரு. சிவசைலம் கூறினார்.

## பணம் வேண்டாம்; ஓய்வுதான் தேவை!

ஓய்வு நேரத்திலும் ஏதாவது வேலை செய்து பணம் பண்ணி விடவேண்டும் என்பதுதான் பெரும்பாலானவர்களின் விருப்பமாக இருந்து வருகிறது. ஆனால் ஜெர்மனி கூட்டாட்சிக் குடியரசைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகள் எங்களுக்குப் பணம் வேண்டாம்; ஓய்வுதான் தேவை என்று பிடிவாதமாகக் கூறுகிறார்கள். போலீஸ் அதிகாரிகளின் வேலை நேரத்தைச் சற்று மிகுதியாக்கி அதற்குக் கூடுதலான சம்பளம் அளிக்க பெர்லினில் ஆட்சியாளர்கள் திட்டமிட்டனர். ஆனால் போலீஸ் அதிகாரிகள் சங்கங்கள் இந்தத் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டன. கூடுதலான சம்பளம் பெறுவதை விட அதிக நேரம் ஓய்வு எடுப்பதையே போலீஸ் அதிகாரிகள் விரும்புவதாக அது ஆட்சியாளர்களுக்கு திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

—"தினமணி"

# தமிழ்நாடு அரசு மானிய உதவிபெறும் நடுநிலைப்பள்ளி நிர்வாகத்தினர்களின் சங்கம்

❊

## ஏழாவது வருடாந்திய மாநாடு
## 9-6-1969

### தலைவர் திரு. கே. சுந்தரம், எம். பி.
*அவர்களின் பேருரை*

❊

**பெருமைமிகு கல்வி அமைச்சர் அவர்களே, தேர்ந்தெடுக்கப் பட்ட மாநாட்டுப் பிரதிநிதிகளே, சகோதர சகோதரிகளே!**

நம் இராச்சிய சங்கத்தின் செயற்குழு என்னைத் தலைமை தாங்கத் தகுதியுள்ளவன் எனக் கருதி என்னை அழைத்துள்ளதை நான் பெருமை கொள்வதற்குரிய தாய்க் கருதுகிறேன். இம் மாநாட்டை மிக முக்கியமானதாய் நான் எண்ணுகிறேன். ஏனெனில் அரசாங்க மானியம் பெற்று நடந்து வரும் நடுநிலைப் பள்ளிகளின் எதிர் காலம் இம் மாநாட்டில் தீர்மானிக் கப்படும் முடிவுகளைப் பொறுத்தே அமைந்துள்ளது மாண்புமிகு கல்வி அமைச்சர் நம் வேண்டு கோளுக்கிணங்கி இம் மாநாட் டைத்துவக்கி வைக்க இணங்கிய தும் அதன் பொருட்டு அவர் இங்கு வந்திருப்பதும் மகிழ்ச்சி யானதோர் முன்னுணர்வாகும். அவர் நம்மிடையே யிருப்பது நம் பிரச்சினை அவர் முன் வைப்பதற்கு ஒரு வாய்ப்பை அளித்துள்ளது. திறமையும் ஊக்கமுமுள்ள இந்த இளம் அமைச்சர் நம் இன்னல்களை அறியவும், அவற்றை அகற்றவும் ஆர்வமிக்கவராய் இருக்கிறார் என்ப தில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

## முன்னுரை

நம் நடுநிலைப் பள்ளிகள் பொறுத் தவரை, மானிய உதவித் திட்டத் துடன் அமுலாகிய ஓர் அரசாங்கக் கட்டளையின்படி 1964-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதற்கொண்டு பதி னோராம் வகுப்பு வரையில் கல்வி இலவசமாக்கப்பட்டது. அவ்வர சக் கட்டளையின் தீய விளைவுகள் பல. அன்றியும் அது இன்று அரசாங்க மானியம் பெற்று நடத் தப்படும் உயர்நிலைப் பள்ளிகளில் நகைப்பிற்கிடமாக்கும் சூழ் நிலையை உருவாக்கியுள்ளது.

இப்போதுகூட நமக்குப் பள்ளிகளில் கட்டணங்கள் வசூலிப்பதை மிக எளிதாக நீக்கிய அந்த அரசாங்கக் கட்டளையின் முறைத் தகுதியைப் பற்றிய சந்தேகங்கள் நமக்கு இருக்கின்றன. இதுகாறும் பள்ளிகள் அனுபவித்து வந்த உரிமைகளை இக்கட்டளை பறித்து விட்டது.

1964ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடு நிலைப்பள்ளிகளில் கட்டணங்கள் வசூலித்தலை ஒழிக்கும் அரசாங்கத் தீர்மானம் சம்பந்தமான பணித்துறை அறிவிப்பு வெளியிட்டபோது முக்கியமாகப் பாதிக்கப்பட்ட பள்ளிகள் அதிர்ச்சியடைந்தன. நிறுவனங்களின் பாதிக்கும் விஷயத்தில் அவை கலந்தாராயப்படவில்லை: இவ்வரசாங்கக் கட்டளை தீர்மானிக்கப்பட்டு அமுலுக்குக் கொண்டு வரப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் 1964ஆம் ஆண்டு ஏப்ரல்மாதத் தொடக்கத்தில் அரசாங்கம் தன்னிடமிருந்து மானியம் பெற்றுச் செயல்புரியும் பள்ளி நிர்வாகத்தினர்களின் ஒரு சில பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்ததாகத் தோன்றுகிறது. இது குடியாட்சிக்கு மிகவும் ஒவ்வாததாகும். இது ஒரு கண் துடைப்பு வேலை என்றும் கூறலாம்.

## பற்றுத பராமரிப்பு மானியங்கள்

கருணையாண்டான 1964-ல் 1. பழுது பார்த்தலும், பேணிக்காத்தலும், 2. மேசை, நாற்காலிகள் முதலியன பழுது பார்த்தல், 3. அன்றாடச் செலவினங்கள் போன்ற பல தலைப்புகளில் நிர்வாகத்தினர்களுக்குப் பெரும் போக்கான வகையில் மானியங்கள் அளிக்கப் போவதாக எங்களிடம் கூறப்பட்டது. குறிப்பிட்ட சில பிரதிநிதிகளின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட கூட்ட முடிவுகளில் இது ஒன்றாகும் ஆனால், உண்மையில் நடைமுறையில் இருந்து வருவது உண்மைக்கு வேறுபட்டதாகும். என்னுடையதைப் போன்று பெயர்ப் பட்டியலில் 1,250ம் அதற்கு மேலும் மாணவர்களைக் கொண்ட பள்ளிக்குக் கடந்த சில ஆண்டுகளில் அளிக்கப்பட்ட பராமரிப்பு மானியம் வருமாறு :—

1964-65க்கு ரூ. 1,685-00
1965-66க்கு ரூ. 1,831-00
1966-67க்கு ரூ. 3,267-00
1967-68க்கு ரூ. 2,910-00

ஆனால் ஆண்டுதோறும் இது போன்ற பள்ளிக்கு ஆகும் செலவு ரூ 15,000 ஆகும்.

மானியங்கள் வழங்குவது பற்றிய புதிய திட்டமொன்று சிந்திக்கப்பட்டு, நடைமுறையில் கொண்டு வருகையில் அவை முன்னர் நியாயமாகப் பெற்று வந்த மான்யத்துக்குக் குறைவில்லாத அளவைப் பெறச் செய்திருக்க வேண்டும். அதாவது, அவ் விஷயங்களில் முன்னிருந்த நிலை காக்கப் படவேண்டும்.

அடுத்து, நிர்வாகத்தினர் பள்ளியின் பராமரிப்பின் பொருட்டு ரூ. 15,000 கொடுக்க வேண்டுமென்ற ஒப்பந்தம் எவ்வளவு அநீதியா

னதோ அவ்வளவு அவசியமல்லாததும் ஆகும். உதவியாயிருந்த வளங்கள் அரசாங்கத்தால் பறிக்கப்பட்டபோது, அரசாங்கம் எங்களுக்குப் பள்ளிகளை நடத்தப் போதிய அளவு நிதி தரவேண்டியது நியதியும் நியாயமும் ஆகும்.

## அதிக ஆதாரத்துக்கான தேவை

அண்மையில் டில்லியில் கூடிய பல்வேறு அரசுகளின் கல்வி இலாக்காக்களின் செயலர் மாநாட்டொன்றில் தீர்மானிக்கப்பட்ட முடிவொன்று என்னவென்றால் கல்வி நிலையங்களுக்குப் பின்வரும் வழிகளின் மூலமும் நிதிவரவேண்டுமென்பதாகும் :—

1. தனிமுறை வரிகள் அல்லது தீர்வைகள். 2. மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆதரவு அல்லது வசதிக் கட்டணங்கள், 3. பெற்றோர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் பெறும் நன்கொடைகள், இத்தீர்மானங்கள் அறிவில் மேம்பட்ட பிரபல ஆட்சியாளர்களிடமிருந்து வந்துள்ளன. நான் இத் தீர்மானங்களை ஆமோதிக்கின்றேன். அரசாங்கம் தனி முறைத் தீர்வுகளை வசூலித்துப் பள்ளிகளுக்காகச் செலவு செய்யட்டும். எங்களையும் உதவி அல்லது வசதி போன்ற கட்டணங்களை வசூலிக்க அனுமதிக்கட்டும். இதைப் போன்ற தீர்மானமொன்று (ஆண்டுக்கு சிறு தொகையான ரூ. 5 ஆக இருப்பினும்) *இராச்சியக் கல்வி ஆலோசனை* வாரியத்தால் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக நான் கூறப்பட்டேன். எங்களை, மானியம் பெறுச் செயல் புரியும் நிர்வாகத்தினர்களை, ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ஒரு ரூபாய் வசதிக் கட்டணமாக வசூலிக்க அனுமதிக்குமாறு நான் வேண்டுகிறேன். நிர்வாகத்தார்கள் பள்ளிகளைத் தமிழ் நாட்டு மாணவ, மாணவிகட்குக் கல்வி கற்பிக்கத் தகுதியான இடங்களாகச் செய்ய இது முதற்படியாய் இருந்து உதவும்; காலப் போக்கில் இது பெரிதும் பயனளிக்கும்.

## குடியிருப்புப்படி

ஊதியங்கள் அளிக்கும் விஷயத்தில், வேலையில் இருப்போருக்கு, அரசாங்க ஊழியர்களுக்கோ, வங்கிகளில் பணி செய்பவர்களுக்கோ, ஆயுள் இன்சூரன்ஸில் வேலை பார்ப்பவர்களுக்கோ, தொழிற்சாலைகளில் வேலை பார்த்துவரும் பணியாட்களுக்கோ, ஒரு காசுகூட குறைக்கக் கூடாது என்பதை நாம் நன்கு உணர்வோம். அவ்வாறு ஒருசெயல் புரியப்பட்டால், அல்லது சிந்திக்கப்பட்டாலும்கூட, விளைவு உண்மையில் மிகவும் கொடியதாயிருக்கும். 1964ல் புதிய மானிய உதவித் திட்டம் புகுத்தப்பட்டபோது எங்கள் ஆசிரியர்கட்கு நாங்கள் கொடுத்து வந்த குடியிருப்புப்படி ஏன் எங்களுக்கு அளிக்கப்படவில்லை. என்பது எங்களுக்குப் புரிந்து கொள்ள முடியாத புதிராக உள்ளது. ஆனல் அப்போது சென்னை இராச்சிய அமைச்சராயிருந்த திரு. வெங்

கடராமன் இக் கருத்து பற்றி இராச்சிய சட்டசபையில் பேசுகை யில் அரசாங்க மானியம் பெறும் நிர்வாகத்தார்கள் செய்துகொண்ட ஒப்பந்தச் சட்டத்தை வேலையி லிருப்போருடன் வைத்துக் கொள் வோம் என்றார். ஆனால் அவரது அரசாங்கம் மானியம் பெறும் நிர் வாகத்தார்களுடன் வைத்துக் கொண்ட ஒப்பந்தக் கடமை யுணர்ச்சியை மறந்துவிட்டது. பரி தாபகரமான ஆசிரியர்கள்! அவர் களது ஊதியங்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் அவர்கள் வேலை நிறுத்தம் என்றுகூட ஒரு அச்சுறுத் தலை வழிமுறையாகக் கொள்வதாக புலப்படவில்லை!

## குமாஸ்தாக்கள் வேலையாட்கள் ஆகியோரின் வீதக்குறிப்புகள்

மற்றொரு விஷயம்பற்றி நாங்கள் வருந்துவது என்னவென்றால் குமாஸ்தாக்கள், வேலையாட்கள் ஆகியோரின் வருவாய் வீதக் குறிப் புக்கள் பற்றியதே ஆகும். 1964ல் அமுலாகிய இலவசக் கல்வி முறைக்கு முன்னர், கல்வி இலாக் காவால் பல ஆண்டுகள் அனுப வத்திற்குப் பிறகு உருவாக்கப் பட்ட குமாஸ்தாக்கள், பணியாட் கள் இவர்களது வருவாய் வீதக் குறிப்புகள் நடைமுறையில் இருந் தன. இலவசக் கல்வி வந்தவுடன் வீதக் குறிப்பு கடுமையாகக் குறை கப்பட்டது. உடனடியாகப்பழைய வீதக் குறிப்புகள் கொண்டுவரப் படவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.

பள்ளிக்கூடக் கட்டணவசூல் முறை ஒழிப்பு அதிகபட்சத்தில் ஒரு எழுத்தர் அல்லது குமாஸ் தாவைத் துறக்க உத்தரவாதஞ் செய்யலாம். ஆனால் இது எந்த விதத்தில் குமாஸ்தாக்கள் (ஆய்வுக் கூட, நூலகக் கையாட்கள் உள் பட) நீர் கொண்டுவரும் பெண் டிர், தோட்டிகள், காவலர்கள் இவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் உதவிசெய்யும்? இல வசக் கல்வி ஏற்பட்டதன் பொருட் டுப் பள்ளி அறைகள் குறைவாகப் பெருக்கப்பட வேண்டுமா? மல சலம் கழிக்குமிடங்கள் குறை வாகச் சுத்தம் செய்யப்பட வேண் டுமா? குடிநீர்ப் பாத்திரங்கள் குறைவாக நிரப்பப்பட வேண் டுமா? ஒரு வேளை இத்தகைய ஆட்குறைப்பு இலவசக் கல்வியால் ஏற்படும் செலவை ஈடுசெய்யும் முயற்சி போலும்! இது ஒரு வருந்தத்தக்க நட்ட ஈடாகும். முன்பு குமாஸ்தாக்களுக்கும் பணி யாட்களுக்கும் இருந்துவந்த வீதக் குறிப்புகளை மீட்க விரும்புகிறோம். இதற்கடுத்துள்ளது பகுதி வேலை யைச் செய்துவரும் தோட்டிகளைப் பற்றியதே யாகும். பகுதிவேலை என்பது வேலையே இல்லை. பெரும்பாலும், அவன் அல்லது அவள் சம்பள நாள் அன்றுதான் பள்ளிப் பக்கம் திரும்புவார்!

செயலரின் அற்புதமான அறிக் கை இக்கருத்துக்களைத் தெளிவு படுத்தியுள்ளதால் நான் அவற்றை விரிவாக்க விரும்பவில்லை.

## நிர்வாகத்தார்களின் அதி காரங்கள் அரித்தழிக்கப்படல்.

1964ஆம் ஆண்டு சூன் மாதத்

திற்குப் பிறகு இந்த அரசாங்கக் கட்டளை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதால் மேற்கூறிய விஷயங்களும் அவை சம்பந்தப்பட்ட விஷயங்களும் மானியம் பெற்றுப் பணிபுரியும் நிர்வாகத்தார்களின் அதிகாரங்களை நுட்பமாக அரித்தழித்துள்ளது. அதிகாரங்களை அழித்தரிக்கும் மூன்று காரணங்கள், துறை இலாக்கா அதிகாரிகள், தணிக்கையாளர்கள், வேலை தேடித்தரும் அகம் ஆகியவையாகும்.

## துறை இலாக்கா அதிகாரிகள்

ஒவ்வொரு வேலை அமர்த்தலையும் தாங்களே அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். ஒவ்வொரு புதிய வேலையை உருவாக்க வேண்டுமென்றால் அவர்களை அணுகியே தீரவேண்டும். புதிய வகுப்பொன்று திறக்கப்பட வேண்டுமென்றால் அவர்களைக் கலந்தே செய்யப்பட வேண்டும் இவையும் இன்னும் பலவும் நமைச்சலை உருவாக்குகின்றன. அன்றியும், துறை இலாக்கா உயர் பணியாளர்கள் நிர்வாகத்தார்களை அடக்கி ஆளுகிறார்கள். மாதாந்தர மானியங்கள் அவர்களிடமிருந்து வருவதால் நிறுவன அலுவலர் குழாம் நிர்வாகத்தார்களை தம்முடைய வெறுப்பைத் தெரிவிக்கும் வகையில் நோக்குகிறார்கள். அன்றியும், பணித் துறை இலாக்காக்களிடம் மேன்மேலும் தங்கள் பற்றுறுதியைச் செலுத்துகிறார்கள். பள்ளிகளின் நிர்வாக சம்பந்தமான இவை பற்றியும், இவை சம்பந்தமான பல இதர விஷயங்களைப் பற்றியும் தெளிவான உரைகளைப் பெற விரும்புகிறோம்.

**ஒரு தணிக்கைச் சட்டத் தொகுப்பை** ஏற்படுத்துமாறு நாங்கள் அரசாங்கத்தை மன்றாடிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்பேற்பட்ட சலுகை ஒன்று எங்களுக்கு இதுவரையிலும் அளிக்கப்படவில்லை. கணக்குகளும் நிதி சம்பந்தமான குறிப்புக்கள் தயாரிப்பதற்கான கட்டளைகளும் அவ்வப்போது அனுப்பப்படுகின்றன. செலவினங்களின் அளவுகளும், அவை செலவழிக்கப்பட வேண்டிய முறைகளும் கொஞ்சம் கொஞ்சமாக அனுப்பப்படுகின்றன. இதன் விளைவாகப் பள்ளி நிர்வாகத்தாரோ தலைமை ஆசிரியரோ அதை ஒருமுகப் படுத்த இயலாதவராய் இருக்கிறார். இந்த எல்லாச் செயல் துறைக் கட்டளைகளும் ஒருமைப் படுத்தப்பட்டு, கையெழுத்துப்படிகள் எடுத்தோ, அச்சடித்தோ சிறிய புத்தக வடிவில் உருவாக்கி எங்களுக்குக் கொடுத்தால் எங்களுக்கு உதவியாயிருக்கும் பள்ளி நிர்வாகத்தின் முக்கியப் பகுதியான இதற்கு அப்புத்தகம் ஒரு வழிகாட்டியாகும். இப்படி ஒன்று இல்லாததால் இத்துறையில் கூட எது செய்வது என்று தெரியாமல் திகைக்கிறோம். தணிக்கையாளர்கள் எங்கள்மீது அதிகாரக் கணையை வீசுகிறார்கள்.

வெள்ளையுள்ளம் படைத்த நிர்வாகத்தாரைத் துன்புறுத்தும் மூன்றாவது காரகம் வேலையைத்தேடித்

தரும் அகம் ஆகும். இவ்வகம் காலண்டுக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கக் கோருகிறது. அவர்கள் அனுப்பும் வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து தான் வேலைகளுக்கு அமர்த்த வேண்டுமென்று எதிர் பார்க்கிறது. இதனால் இது கால தாமதத்தைக் குறிக்கவல்லது. நிர்வாகத்தார் தங்களுக்குத் தெரிந்த தகுதி யுடையோரை வேலைக்கு அமர்த்த அதற்கு அதிகாரம் கிடையாது என்பது தெளிவாகும். இப்போது சென்னையில் பட்டமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் ஒருமுசப்படுத்தப்பட்டதால் தாமதம் இன்னும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு.

போதிய கல்வியறிவு பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காமல் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் நியமனம்செய்யப்படும் போது வேலை தேடித்தரும் அகம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லையென அத்தாட்சிச் சீட்டை அளிக்கவேண்டும். அவ்வாறு செய்யப்படாவிடில் மாவட்டக் கல்வி அதிகாரி அவ்விதமான நியமனத்தை அங்கீகரிக்கவோ அல்லது அவ்வாசிரியர் சார்பில் தனிச் சலுகைக் கட்டளையையோ வெளியிடுவதில்லை. அவ்வித பிரத்யேகக் கட்டளைகள் இல்லாவிடில் ஊதியங்கள் வழங்குவதைத் தணிக்கையாளர் அனுமதிக்க மாட்டார். அவர்கள் மாவட்டக்கல்வி அதிகாரியும் வேலை தேடித்தரும் அகத்தைச் சார்ந்தவர்களும், நிர்வாகத்தினர்களுக்கு எதிராக இருப்பதில் ஒத்துழைக்கிறார்கள்.பார்த்தீர்களா! மக்களுக்கு வேலை தேடித்தர உதவுவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம் தலைமை அதிகாரம் செய்ய அது முயலுகிறது!

## கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள்

இலவசக் கல்வி கல்வியே இல்லை என்று நம்புவோரில் நானும் ஒருவன். இந்த நம்பிக்கை என்னிடம் வலுப்பெற்றிருக்கக் காரணம் நம் பள்ளிகளில் ஒழுக்கம் குன்றியிருப்பதும் கல்வித் தரங்கள் தகர்ந்து இருப்பதும், பள்ளி மாணவர்களை அடக்குவதில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் சத்தியற்றிருப்பதும் ஆகும். சரி, கல்வித் துறையில் சிறப்புப் பெற்றுள்ள பள்ளிகளின் சிலவற்றிற்காவது கட்டணம் வசூலிக்கும் உரிமை தரப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இச் சோதனையைச் செய்துபார்ப்பது தகுதியான முயற்சியாகும். இது சம்பந்தப்பட்ட எல்லோரும் தீவிர நடவடிக்கையை மேற்கொள்ள நான் சிபார்சு செய்கிறேன். இப்போது என் பள்ளியை வரும் கல்வியாண்டு முதற்கொண்டு கட்டணம் வசூலிக்கும் பள்ளியாக மாற்றியமைக்க அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்கத் தீர்மானித்துள்ளேன். மேலும், நான் அரசாங்கத்திடமிருந்து எவ்வித போதனை மானியங்களையும் கேட்க மாட்டேன்.

## ஆங்கில போதனை முறை

வாசகக் கருத்துக் கூறுப்படி, நான் ஒரு கல்வித்துறை வித்தகர்

அல்ல: ஆசிரியரியலில் உரிமைத் தகுதிக் கேற்ற அறிவையும் நான் பெற்றவனல்ல. ஆனால் நான் ஒரு வியாபாரி ஆவேன். எது நமக்கு நன்மை பயக்கும் என்று நான் அறிவேன். ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக மட்டுமல்லாமல் போதனை மொழியாகவும் இருக்க வேண்டுமென்பதை நான் ஆதரிக்கிறேன். இந்த ஆமோதித்தலின்படி தான் நான் 1954ல் என் பள்ளியைத் துவக்கினேன். ஆங்கில போதனை முறை வகுப்புக்கள் அனுமதிக்கப் படாமலிருந்தால், அப்பள்ளியைத் தோற்றுவித்திருக்கவே மாட்டேன். பல ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் உன்னத நிலைக்குக் காரணம் நாம் ஆங்கிலத்தின் மூலம் பெற்றுள்ள உயர் நிலையே ஆகும். இதை நாம் மறக்கக் கூடாது. நான் கேள்வியொன்றை உங்களிடம் கேட்க விரும்புகிறேன். ஆங்கில போதனை முறையை மேற்கொள்ளும் பள்ளிகளிலும் நம் பள்ளிகளிலுள்ள ஆங்கில போதனை முறையை மேற்கொள்ளும் வகுப்புக்களிலும் பயிலும் மாணவ, மாணவிகள் இரு போதனை மொழிகளைக் கொண்டும் தேர்வுகளை, உயர் நிலைப் பள்ளிப் பொதுத் தேர்வு உட்பட, நல்ல முறையில் செய்யக் காரணம் என்ன? இவ்வினாவை விடுவிக்க விசாரணையையோ அல்லது கல்வி ஆராய்ச்சியின் ஒரு பகுதியாகக் கொண்டு நீங்கள் சோதனை செய்து பார்க்கவோ இதனைச் சிபார்சு செய்கிறேன். நாம் மொழி வெறியர்கள் அல்ல என்பதில் ஐயமில்லை. ஆனால் நோக்கமின்றி நாம் அந்நிலையை அடைவது போல் தோன்றுகிறது. அப்படியில்லையேல் இத் தமிழ் போதனா முறை வற்புறுத்தப்படுவதேன்?

நான் சுட்டிக் காட்ட விரும்பும் மற்றொரு விஷயம் என்னவென்றால், ஆங்கில போதனா முறையைக் கொண்டு பள்ளிகளை நடத்திவரும் தலைமையாசிரியர்கள் பெற்றோர்கள் எது நல்லது என்று கருதுகிறார்கள் என்று நமக்குக் கூறுவார்கள். ஆங்கில போதனா முறைப் படிப்பு வசதிகள் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் வசதிக்கு மேல் தேவை பெருகுகிறது. இத் தேவை அமைச்சர்கள், உத்தியோகத்தர்கள், கல்வியறிவு பெற்ற பெற்றோர்கள் இவர்களிடமிருந்து மட்டும்வருவதில்லை. சாதாரண மனிதரிடமிருந்தும் படிக்காத மனிதர்களிடமிருந்தும்கூட (இதுதமிழ்ப் பண்டிதர்களைக் குறிக்கக் கூறப்படவில்லை) இத் தேவை வருகின்றது! நான் என்னுடைய புதிய அனுபவத்திலிருந்து பேசுகிறேன்.

## உயர்நிலைப் பள்ளியின் இறுதி வகுப்புத் தேர்வின் பொது அல்லது மையமதிப்பீடு செய்யும் முறை

உயர்நிலைப் பள்ளியின் இறுதி வகுப்புப் பொதுத் தேர்வு கல்வி அமைப்பில் முக்கியமானதோர் தேர்வாகும். நம் பள்ளிகளிலுள்ள தரம் இத் தேர்வின் தரத்தைப் பொறுத்துள்ளது. இத் தேர்வின் தரம் தாழ்ந்திருந்தால் இத்தேர்வு

திறிதளவும் மதிப்பைப் பெற்றிருக்காது. கடந்த இரண்டு ஆண்டுகளாக சுமார் இரண்டு இலட்சம் பேர்களுக்கு மிகத் திறம்படத் தேர்வு நடத்தப்பட்டு வருவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. வினாத் தாட்கள் தேர்வுக்கு முன்னுல் வெளிப்படாததும் மெச்சத் தகுந்ததாகும். அரசாங்கத் தேர்வுகளை நடத்தும் தலைமை நிறுவன அதிகாரி நம் பாராட்டுக்குரியவர் ஆவார். ஆனுல் நாம் இப்படியே மதிப்பீடு செய்யும் முறையைப் பற்றிக் கூறமுடியுமா? மைய மதிப்பீடு செய்யும் முறையைப் பற்றி அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. நான் அதை ஆதரிப்பவனே எதிர்ப்பவனே இல்லை. இம் முறை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ருல் இது சீர்திருத்தப்பட வேண்டும். உண்மையில் இது தேர்வு முடிவுகளை விரைவில் வெளியிட அதிகாரிகளுக்குப் பெரிதும் துணை புரிகிறது.

## கூம்பு வடிவமான கல்வி அமைப்பு

பல பையன்களும் பெண்களும் வேலையைத் தேடி என்னிடம் வருகிருர்கள். ஒரு சில வாரங்களுக்கு முன் ஒரு பி. எஸ். ஸி. பட்டதாரி வேலையின் பொருட்டு வந்தார். பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் தொழில் தாபனமொன்றில் தாமாகவே செய்யக் கூடிய வேலை எது? என்று அவரைக் கேட்டேன். என்னுல் எதையும் செய்ய முடியாது' என்று உண்மையாக அவர் பதிலளித்தார். தாம் எதையும் செய்ய முடியாது. என்பதை உணரத்தான் அவர் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பதினேந்தாண்டுகட்குக் குறையாமல் காலத்தைச் செலவழித்துள்ளார். பேரளவில் நம் எஸ். எஸ். எல். ஸி., பி.யூ ஸி. படித்தவரும் பி. ஏ. அல்லது பி. எஸ். ஸி. பட்டம் பெற்றவர்களும் இந்த நிலையில்தான் இருக்கிருர்கள். அவர்களில் ஏராளமானவர்கள் வேலையற்றுள்ளார்கள். அவர்களில் அதிகசதவித அளவு வேலைக்கு லாயக்கற்றவர்கள். இதற்குக் காரணம் என்ன? நம் கல்வி அமைப்பைத் திருத்தி அமைக்க நாம் சிந்திக்கும் நேரம் வந்து விட்டது. ஒரு நாள் பெங்களூரில் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் பேசுகையில் நம் கல்வி வேலைச் சார்புள்ளதாக இருக்க வேண்டுமென்ருர். அவர் சொன்னதை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன். இதை விரைவில் நடைமுறையில் கொண்டு வருவதற்கு இதுவே தக்க சமயமாகும்.

சில மாதங்களுக்கு முன் நான் மேற்கு ஜெர்மனி சென்ற போது சீமன்ஸ் போன்ற தொழில் நிறுவனங்களுக்குச் சென்று பார்க்க வாய்ப்பு ஏற்பட்டது. தொழிற்சாலைகளுடன் தொழிற் பள்ளிகள் இணைக்கப் பட்டுள்ளதை நான் நேரில் கண்டேன். நம் உயர் ஆரம்பப் பள்ளிப் படிப்புக்கு ஒப்பான கல்வியைப் பூர்த்தி செய்ததும் பதினுன்கு வயதான பையன்களை இத்தொழிற் பள்ளிகளில் எடுத்துக் கொண்டு தொழிற்கூடங்களில் பயிற்சி அளிக்கிருர்கள்.

அதே சமயத்தில் நடைமுறையில் இருந்துவரும் மொழியும் ஆதாரங்களாயிருந்து வரும் இயக்கவியலும் அவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. மூன்றாண்டுகள் அத்தகைய பயிற்சி பெற்றபிறகு சுமார் 50 சதவீதம் பயிற்சியாளர்கள் அத்தொழிற் கூடங்களிலேயே வேலைக்கு அமர்த்தப் படுகிறார்கள். மற்றவர்கள் மற்ற தொழிற் கூடங்களிலோ வாணிகச் சங்கங்களிலோ உடனடியாக இலாபகரமான வேலைகளைப் பெறுகிறார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு நல்ல தேவைகள் இருக்கின்றன.

ஆகவே, உயர் ஆரம்பப் பள்ளிப் படிப்பின் இறுதியில் கடுமையான தேர்வு இருக்க வேண்டு மென்றும் கல்லூரிக்குரிய கல்வித் தகுதியற்றோர் தொழிற் பள்ளிகளுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் நான் முறையீடு செய்கிறேன். உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்குத் தகுதியானவர்கள் மட்டுமே உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட வேண்டும். அவர்கள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பின் இறுதியில் மற்றொரு கடினமான தேர்வுக்கு உட்படவேண்டும். முதல் வகுப்பைப் பெறும் திறமையானவர்கள் மட்டும்தான் கல்லூரிகளில் சேர்க்கப் படவேண்டும். எஞ்சியவர்கள் பல தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுப்பப்படவேண்டும். இது நடு நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருந்து வரும் நெருக்கடியைக் குறைக்கும். இதனால் சேமிக்கப்படும் நிதியைக் கொண்டு நாம் தொழிற் பள்ளிகளும், தொழில் நுணுக்கப்பள்ளிகளும் அமைக்கப் பயன் படுத்திக் கொள்ளலாம். அப்படிச் செய்தால் கல்வியானது தொழிலைச் சார்ந்து அமையும். நம் நாட்டில் பட்டதாரிகளின் எண்ணிக்கை குறைவாயிருக்கும். அவர்கள் சிறந்தவர்களாகவும் நன்னிலைப்பெற்றவர்களாகவும் இருப்பார்கள். பல தொழில் பயிற்சிப் பள்ளிகளுக்குச் செல்பவர்கள், பிறகு விரும்பினால், மாலைக் கல்லூரிகள் அவர்களுக்குப் பெரும் போக்கான கல்வியை அளிக்கும் தேவைக்கு ஏற்ப, உண்மையில், அவை எத்தனை இடங்களில் சாத்தியமோ அத்தனை இடங்களில் அவை இருக்கவேண்டும்.

## இலவசக் கல்வி— தவறானதோர் சொல் வழக்கு

இன்று நாம் இலவசக் கல்வியைப்பற்றி மிக அதிகமாகப் பேசுகிறோம். அப்படி இலவசக் கல்வியென்று ஒன்று இருக்கிறதா என்ன ? கல்வி என்றால் பணச் செலவில்லாமல் இல்லை. ஆண்டு வரவு செலவுப் பட்டியலில் கல்விக்காக ஒதுக்கப்படும் கோடிக் கணக்கான ரூபாய்கள் கல்வி அறிவுக்கான செலவைக் குறிக்கும். இப்படி இருக்கும் பொழுது கல்வியை எவ்வாறு இலவசம் என்று கூறமுடியும்? இதற்குத் தேவைப் படும் பணம் வரிகள்மூலம் வருகின்றது. கல்வி இலவசமாக இல்லாதபோது அதற்குப் பணம் ஒரு பகுதி வரிகள் மூலமாகவும், ஒரு பகுதி கட்டணங்கள் மூலமாகவும்

வந்தது. இப்போது அனேகமாக முழுவதும் வரிகள் மூலமாகத்தான் வருகின்றது.

இன்று நம் கல்விக்காகச் செலவு செய்ய பெற்றோர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகிறேன். அவர்கள் தங்கள் குழந்தைகள் கல்வியில் தகுதி பெற, தனிபோதனைப் பயிற்சி மூலம் ரூ. 30 முதல் ரூ. 50 வரையில், ஏன்? அதற்கு மேலும் செலவு செய்கிறார்கள். நம் பள்ளிகளில் கற்பிக்கப்படும் கல்வி தகுதியற்றது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். தரமான கல்விக்கு பணக்கார பெற்றோர்கள் மட்டும் பணச் செலவு செய்கிறார்கள் என்பதில்லை. என் அனுபவத்தில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெற்றோர்களும், ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் பணியாற்றும் ஊழியர்களும்கூட நல்ல கல்விக்காகத் தங்கள் சக்திக்கு மீறி அதிகமான தொகையைச் செலவு செய்கிறார்கள். இப்படியிருக்கையில் இப்படிப்பட்ட பெற்றோர்களின் குழந்தைகளுக்கு ஏன் தரமான பள்ளிகள் இருக்கக்கூடாது?

## தரமான பள்ளிகள்

கடந்த இருபது ஆண்டுகளாக நம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வியின் தரம் பின்னடைந்து வருகின்றது. நம்நாடு விடுதலையடைந்ததிலிருந்து நம் அரசாங்கத்தின் கவனம் பெருகிவரும் கல்வியின் தேவை அளவைப் பூர்த்தி செய்வதில்தான் செல்லுகிறது. ஆனால் தரத்தை மறப்பது புத்திசாலித்தனமாகுமா?

எனக்கு இக்கருத்தைப் பற்றிப் பேசுகையில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதற்குக் காரணம் யாதெனில் நம் பெருமை மிகு கல்வி அமைச்சர் மதுரையில் பேசிய பேச்சொன்றில் மானியம் பெற்று நடைபெறும் பள்ளிகள் தரத்தைப் பேணிக் காக்கிறதென்று அவர் பாராட்டியுள்ளதே ஆகும். (இப்பாராட்டுதல் அச்சுறுத்தலுடன் கலந்திருந்தபோதிலும்) இப்போது அவர் மானியம் பெற்றுவரும் பள்ளிகள் தொண்டு புரிவதற்காகவே இருக்கின்றனவே ஒழிய இலாபத்திற்காக இல்லை என்பதைப் புரிந்துகொண்டிருப்பார் என்று நம்புகிறேன். கடந்த காலத்திலும்கூட அமைச்சர்களும் அதிகாரப் பதவிகளை வகித்த மற்றோரும் மானியம் பெற்று நடைபெறும் பள்ளிகளைப் பாராட்டியுள்ளார்கள். கடந்த காலத்திலும், தொடர்ந்து இக்காலத்திலும் அரசாங்கமும் தலத்தாபன ஆட்சி மன்றங்களும் இத்துறையில் எதையும் செய்யாதபோது இந்நிறுவனங்கள், கல்வியறிவை, அதுவும் தரமான கல்வியறிவைப் போதிக்கும் பொறுப்பை ஏற்று நடத்தி வருவதற்கு நம் இராச்சியமும் நாடும் இந்நிறுவனங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டு இருக்கின்றன. ஆனால் வருந்தத்தக்கது யாதெனில் இது வரையிலும் அத்தாபனங்களை அழிக்க முயற்சிப்பதே நாகரிகமாய் இருந்து வருகிறது. அமைதியான முறையில் செயல்படவும் இடையூறின்றி இருந்து வரவும் இப்பள்ளிகள் அனுமதிக்கப்படக் கூடாதா? இவைகள்தான் கல்வித் தரங்களைக்

காக்கச் சிறந்த கலங்கரை விளக்காக அமைய முடியும்.

## கல்வியில் அரசாங்கத்தின் முதலீடு

நான் ஒரு வியாபாரி, இதை நான் முன்பே கூறியுள்ளேன். நடைமுறையில் நம் கைமீதுள்ள பிரச்சனைகளைத் தீர்க்க சாத்தியமான முறையை மேற்கொள்கிறேன். இந்திய அரசியல் அமைப்பில் ஓர் உடன்பாட்டின் விதியைப் போன்று பதினான்காம் வயது வரையில் ஒவ்வொரு பையனும் பெண்ணும் கட்டாயமாக இலவசக் கல்வி கொடுக்கப்பட வேண்டுமென்று கூறுகிறது. இதன் பொருள் யாதெனில் ஒவ்வொரு பிள்ளையும் உயர் ஆரம்பப் பள்ளி அளவிற்குக் கல்விக் கற்கவேண்டும் என்பதே ஆகும். நாம் நம் இராச்சியத்தில் ஒவ்வொரு பிள்ளையையும் இந்த அளவிற்குக் கொண்டு வந்துள்ளோமா? அவர்கட்கு ஆரம்பப் பள்ளிகளில் முறையான கல்வியை அளிக்கிறோமா? தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க இப்பள்ளிகள் தகுதியான இடங்களா? அவைகள் இல்லை. நம் திறமை மிகுந்த பல்கலைக் கழகத்துணைவேந்தர் நாம் முற்றிலும் ஆரம்பக் கல்வியை ரத்து செய்துள்ளோம் என்று கருதுகிறார். அது ஒரு பெருங் குறையாகும். அதை நாம் உயிர்ப்பிக்க விரும்பினால் இராச்சிய வரவு செலவுப் பட்டியலில் ஒதுக்கும் எல்லா நிதியும் இதற்கே தேவைப்படும். இது ஒப்புக் கொள்ளப்பட்டால் ஏன் நம் இராச்சியத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இந்த ஆடம்பரமான இலவசக் கல்வி?

## முடிவுரை

நான் ஒரு கல்வி வித்தகர் என்று ஒப்புக்கொள்கிறேன். இத்துறைக்கு நான் ஒரு அன்னியன். இருப்பினும் நாம் இத்துறையில் உள்ளேறித் தாக்கக் காரணம் பரிதாபகரமான வேலையற்றோரின் கோலத்தைக் கண்டு தூண்டப்பட்டதே ஆகும். நாள் தோறும் நான் அவர்களை உறுதியில்லாத நிலையில், வேலை தேடி அலைவதைக் காண்கிறேன். மனதிற்குப் பிடிக்காதவற்றை நான் கூறியிருந்தால் அது எவரையும் கேலி செய்யும் எண்ணத்துடன் சொல்லவில்லை. இப்போதோ, பிறகோ, நம் பள்ளிகளும் கல்லூரிகளும் தரமான கல்வியை அளிக்கத்தக்க சாதனங்களாக ஆகவேண்டுமென்ற நல்லெண்ணத்துடனும் நன்னம்பிக்கையுடனும் இவற்றை நான் உள்ளாரக் கூறியுள்ளேன். முடிந்தால் இந்நிலை வெகு விரைவில் ஏற்படட்டும்.

சகோதர சகோதரிகளே, நீங்கள் பரிவிரக்கத்துடனும் பொறுமையுடனும் என் உரையை இன்று காலை நெடுநேரம் கேட்டு என்னை கௌரவித்ததற்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# கல்வி பெறல் மானிடவுரிமை

[ ஜி. ஸ்ரீநிவாசாச்சாரி ]

●

வேத மோதத் தகுதியுடையோர் இன்னர் என்ற பழைய காலத்தில் வரையறை இருந்தது. ஆனல் இருபதாம் நூற்ருண்டில், முக்கியமாக இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப் பின் நூலறிவு பெறல் ஒவ்வொருவனுக்கும் பிறப்புரிமை என்னும் கொள்கையை எல்லா நாடுகளும் பின்பற்றி வருகின்றன.

## அடிப்படை உரிமை

1948ல் ஐக்கிய நாட்டுச்சபை மானிடரின் அடிப்படையுரிமைகளைத் தொகுத்துக் கூறியுள்ளது. அவ்வுரிமைகளுள் கல்விப்பயிற்சி பெற மக்கள் அனைவர்க்கும் சம உரிமை உண்டு என்று திட்டமாகக் கூறப்பெற்றதொன்ருகும். இத்தகைய உரிமை விளம்பரத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவை ஆசிரியச் சங்கங்களின் உலக மகா சபை அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் 1968ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25ந் தேதியன்று கொண்டாடியது. அம் மாதம் 22ந்தேதி முதல் 31ந்தேதி வரை 10 நாட்கள் உலகவாசிரியர் மாநாடு டப்ளினில் நிகழ்ந்தது. இந்த விழாவில் கலந்து கொள்ள டப்ளினுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அடிப்படையுரிமைகளின் இருபதாம் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் என் மனத்தைக் கவர்ந்தன. அப்பொழுது நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்களுள் மிக முக்கியமானது:

கல்வி அடிப்படையான மனித உரிமை. அதைப் பெறுவதற்கு எல்லா மக்களுக்கும் வேறுபாடில்லாமல் சரிசமமான வாய்ப்புகள் அளிக்கப்படல் வேண்டும் என்ற கருத்தடங்கியதாகும். அதை அமலுக்குக் கொண்டு வரும் உபாயங்களும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

## ஏற்றத்தாழ்வுகள்

மானிட உரிமைகள் யாவை என்பதைப் பள்ளிக் கூடங்கள் உணர்த்தக்கூடும்; ஆனல் அவ்வுரிமைகளைப் பெறச் செய்தல் இயலாது. குடிப் பிறப்பிலும், பொருளாதார நிலையிலும் சமூக அந்தஸ்திலும் காணும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்குப் பள்ளிக்கூடங்களால் முடியாது. உடல்வன்மையிலும், நுண்ணறிவிலும் வாழ்க்கை வெற்றி பெறும் திறமையிலும் மக்களிடை வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். ஏதோ ஒரு வகையில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பகுப்பிரண்டு எல்லா நாடுகளிலும் உண்டு.

## சமத்துவம்

"அரிது, அரிது, மானிடராதல் அரிது" என்பதனல் மனித

வர்க்கத்தைச் சேர்ந்த அனைவருக்கும் பொதுவான கௌரவமும் சமத்துவமும் உண்டென்பதுதெளிவாகிறது. 'தோழமை' என்று அவர் (இராமர்) சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ' என்று குகன் கூறியதையும், குகனையும் தன் மக்களுள் ஒருவனாகச் சேர்த்துக் கொண்டு "நீங்கள் ஐவரும் ஒரு வீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்தீர்" என்று கோசலை கூறியதையும் நோக்குக. குசேலன் படுத்திருந்த படுக்கையில் கண்ணபிரான் அமர்ந்து, 'வழி நடந்திளைத்தவே இம்மலரடி இரண்டும்' என்றுரைத்து, அவற்றை மெல்ல வருடியதையும் காண்க. இத்தகைய மனித சமத்துவத்தை உணர்ந்து, சாதி, மதம், மொழி, செய்தொழில் ஆகிய இவற்றால் தோன்றும்வேறுபாடுகளைக்கவனிக்காமல் எல்லோரும் இந்திய நாட்டு மக்களாதலால் சகோதரர்கள் என்ற மனப்பான்மையுடன் பள்ளிக்கூடங்களில் சிறுவர் சிறுமியர் பழகினால் தேசிய ஒற்றுமை பெருகி வளரும்.

## குழந்தை மனமும் புறச் சூழ்நிலையும்

சிறு குழந்தைகள் தம்முள் எந்த வேற்றுமையும் பாராட்டாமல் கலந்துறவாடி மகிழ்ந்து விளையாடுகின்றன. அப்படிப் பழகுதல் குழந்தைகளின் இயல்பு. ஆதலால் 11 வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமியருக்குச் சமத்துவத்தைப் பற்றி ஆசிரியர் அதிகமாகக் கூற வேண்டா. அவ்வயதுக்கு மேற்பட்ட மாணாக்கரின் உள்ளத்தில் குடும்பத்தாரிடமும் சுற்றுப்புறத்தில் வாழ்வோரிடமும் உள்ள குணமும் குற்றங் குறைகளும் எளிதில் பதிகின்றன. மேலும் மேடைப் பிரசாரங்கள் அவர்கள் மனத்தைக் கவருகின்றன. ஆதலால், இவர்களின் உள்ளத்தைப் பண்படுத்துவது ஆசிரியருக்கு எளிதானதன்று. தனித்தனியாக மாணாக்கரைக் கவனித்தல் ஆசிரியருக்கு இன்றியமையாத ஒரு கடமை. வகுப்பில் உள்ள சிறுவரின் தொகை நாற்பத்தைந்துக்கு மேல் இருத்தலால் ஆசிரியர் அக்கடமையைச் செய்ய இயலவில்லை. ஆயினும் ஒரு வகுப்பை ஐந்தாறு சிறு பகுதிகளாகப் பகுத்து, ஆக்க வேலையில் ஈடுபடுத்தி சகிப்புத் தன்மையையும், நட்புறவையும் நல்லாசிரியர் வளர்க்கக்கூடும்.

## சம வாய்ப்பும் இடையூறும்

இனி, கல்வியில் சம வாய்ப்புகள் பெறச் செய்தலைப் பற்றிக் கவனிப்போம். பெரும்பாலும் இக்குறிக்கோள் பேச்சளவில்தான் நிற்கிறது. செயல்படுத்துவதில் இடையூறுகள் உள. முதற்கண் தொடக்கநிலைக் கல்வி வட்டத்தை நோக்குவோம். இலவசக் கட்டாய ஆதாரக் கல்வியை ஏழு முதல் பதினான்கு வயதுடைய சிறுவர் சிறுமியர்களுக்குப் பத்தாண்டுகளுக்குள் அளித்தல் வேண்டும் என்ற தீர்மானம் சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆனபோதிலும், இன்னும் நிறைவேறவில்லை. பள்ளிக்கூடங்களில் சேரும் குழந்-

தைகளின் தொகை ஆண்டு தோறும் பெருகி வரினும்; பள்ளிக்கூடம் சேராத குழந்தைகளின் தொகையும் வளர்ந்து வருகிறது. உதாரணமாக இந்தியாவில் 1961-62-இல் 6—7 வயதுடைய குழந்தைகளுள் நூற்றுக்கு ஏறக்குறைய நாற்பதின்மரே முதல் வகுப்பில் சேர்ந்தனர்; மிகுந்த அறுபதின்மர் பள்ளிக்கூடப் படிப்பு இல்லாமலே வளர நேர்ந்தது.

## இலவச ஏற்பாடுகள்

1965-66-இல் முதல் வகுப்பு மாணுக்கரின் தொகை நூறு என்ருல் ஐந்தாம் வகுப்பு மாணுக்கரின் தொகை ஏறக்குறைய இருபத்தொன்பதாகும். எட்டாம் வகுப்பு மாணுக்கரின் தொகை, ஏறத்தாழ பதினைந்தாகும். இதிலிருந்து தொடக்கக் கல்வி முற்றுப்பெருமல் பள்ளிக்கூடத்தை பல காரணங்களால் விட்டு விலகும் குழந்தைகளின் எண்ணிக்கை வருந்தத்தக்க அளவு பெருகியுள்ளது என்பது விளங்கும்.

வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் பாடத் திட்டத்தை அமைத்து இலவசப் படிப்புடன் இலவச உணவு, உடை, உறையுள் இவற்றையும் அளித்து கட்டாயப்படுத்தினுல் அன்றி எழுத்தறியாமை நம் தேசத்தில் ஒழியாது என்பது உறுதி. இதற்குப் பொருள் தேவை.

## ஏழை மாணவர் நிலை

இனி பள்ளிக் கூடத்தில் சேரும் குழந்தைகள் சம வாய்ப்புகள், பெறுகின்றனரா என்பதனைக் குறித்து ஆராய்வோம். பெரும் பொருள் படைத்த சிலர் தங்கள் மக்களை வெளி நாடுகளுக்குக் கல்வி கற்க அனுப்புகின்றனர். இன்னும் சிலர் டேராடூன், லவ்டேல், ஹைதராபாத் முதலிய சில இடங்களில் பெரும் பொருள் செலவிட்டு, தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கின்றனர். நடுத்தரப் பொருளாதார நிலையில் உள்ளோர் தங்கள் குழந்தைகளை மத்திய அரசாங்கத்தார் நிறுவியுள்ள 'கேந்திரிய' வித்யா சாலைகளுக்கும், 'சேனிக்' பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்புகின்றனர். அறிவுத்திறன் பெற்ற சில ஏழைக் குழந்தைகளும் அரசாங்க மானியம் பெற்று 'இவ்விரண்டி'லும் சேர வாய்ப்பு உண்டு. ஆயினும் அலைகடல் பனியினுல் நிரம்புமா? புத்திசாலிகளான ஏழை மக்கள் போதிய உதவியின்றி பரிதவிக்கின்றனர். 'பப்ளிக் ஸ்கூல்ஸ்' என்னும் கலாசாலைகளில், ஏழை மாணுக்கர் சேர்ந்து, கற்க வாய்ப்பு இல்லை. அதனுல் செல்வக் குழந்தைகள் ஏழை மாணுக்கரோடு கலந்து உறவாடிப் பழகுவதற்கு வாய்ப்பே இல்லை. ஜனநாயக ஆட்சியில் இத்தகைய பழக்கம் இன்றியமையாதது.

பொருள் நிலையில் தாழ்ந்தோர் பெருப்பாலும் அரசாங்கத்தாராலோ, அரசாங்க மானியம் பெறும் தனியாராலோ நடத்தப்படும் இலவசப் பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் குழந்தைகளை

அனுப்புகின்றனர். இவற்றில் தேர்ச்சி பெறும் மாணுக்கருக்கு ஏற்ற உத்தியோகங்களோ நுண்ணறிவுக்கேற்ற சர்வகலாசாலைப் படிப்போ கிடைப்பது மிக அரிது என்பது அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

## பெற்ருேர் உரிமை

'எல்லாக் குழந்தைகளையும் ஒரே திட்டப்படி, பாடங் கற்கும் முறையை வகுத்து, செல்வர் மக்களுக்கே உதவும் பள்ளிக் கூடங்கள் தாமாகவே ஒழிந்து போகும் நிலைமையை அரசாங்கம் உண்டாக்கலாம் அன்ருே' என்று சிலர் கருதலாம். பல வகையான பள்ளிக் கூடங்களும் பல வகையான போதன முறைகளும் இருப்பது அவசியம். தம் மக்கள் எத்தகைய கல்வியைக் கற்க வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை பெற்ருேருக்கு உண்டு. இது அடிப்படையான உரிமை. இதற்குப் பழுது நேர்ந்தால் நாட்டிற்கு நலன் உண்டாகாது.

## செய்யத் தக்கது

ஆதலின் கல்வித்துறையில் இப் பிரிவுகளை நீக்கி அனைவரும் சம வாய்ப்பு பெறச் செய்யத்தக்கது யாது என்று ஆராய்வது அவசியமும் அவசரமுமான சேவையாகும். உடனடியாகச் செய்யத் தக்கது யாது என்ருல், நுண்ணறிவு பெற்ற சிறுவர் சிறுமியர், எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் தத்தம் திறனுக்கேற்றவாறு உயர் கல்வி பெறும்படி செய்வதேயாகும். அவர்களுள் மாதம் ரூபாய் ஐந்நூற்றுக்கும் குறைந்த வருவாய் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மேற்படிப்புக்கு ஆகும் செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக் கொளல் வேண்டும். இத்தகைய சலுகை பெறுவதற்கு உரியோர் யாவர் என்பதைக் கல்வி யாராய்ச்சி நிபுணர்களைக் கொண்டுதான் தீர்மானித்தல் வேண்டும். இப்பொழுதுள்ள பரீட்சைகள் உண்மையான நுண்ணறிவின் அளவைக் காட்டப் பயன்படா. நுண்ணறிவு பெற்ற சிறுவர் சிறுமியரைக் கண்டறிவது சம வாய்ப்பு பெறச் செய்யும் குறிக்கோளை அமுலுக்குக் கொண்டு வரும் அடிப்படைச் செயலாகும்.

## ஹைகோர்ட் தீர்ப்பு
## தனியார் பள்ளியை மூடுவதற்கு அரசுக்கு அதிகாரம் இல்லை

தென்னாற்காடு ஜில்லாவில் ஜக்கம்பேட்டையில் உள்ள தாகூர் உயர்நிலைப் பள்ளியை 1966-67க்குப் பின் மூடுமாறு தமிழக சர்க்கார் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவையொட்டி செகண்டரி கல்வி டைரக்டரும், விழுப்புரம் ஜில்லாக் கல்வி அதிகாரியும் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தனர். சர்க்கார் உத்தரவை ஆட்சேபித்து ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டது. ஹைக்கோர்ட்டில் நீதிபதி எம். எம். இஸ்மாயில் ரிட் மனுவை அனுமதித்து, சர்க்கார் உத்தரவை ரத்து செய்தார்.

சர்க்கார் உதவி பெறும், அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் சம்பந்தமாக உதவியை அல்லது அங்கீகாரத்தை வாபஸ் பெற கல்வி அதிகாரிகளுக்கு எத்தகைய அதிகாரங்கள் இருந்த போதிலும் சரி, சர்க்காரின் உதவியைப் பெறுவதாக நினைத்துக்கொண்டு ஒரு தனியார் பள்ளியை மூடுமாறு சர்க்கார் உத்தரவிட விதி அல்லது சட்டம் எதுவும் இல்லை என நீதிபதி அபிப்பிராயப் பட்டார். சர்க்காருக்கு அதிகாரம் எதுவும் இல்லை என்பது ஒரு புறமிருக்க, சர்க்கார் இத்தகைய உத்தரவைப் பிறப்பிப்பது அரசியல் சட்டத்தில் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள ஒரு பிரஜையின் ஜீவதார உரிமைக்கு முரணானது என்று நீதிபதி கூறினார்.

எனவே ரிட் மனுவை நீதிபதி அனுமதித்து சர்க்கார் உத்திரவையும், இதர அதிகாரிகளின் நடவடிக்கையையும் ரத்து செய்தார். மனுதாரரின் பள்ளியை மூடுமாறு உத்தரவிட சர்க்காருக்கோ அன்றி கல்வி இலாகாவின் இதர அதிகாரிகளுக்கோ அதிகாரமில்லை என்று நீதிபதி குறிப்பிட்டார்.

## தமிழக அரசு உத்தியோகப் பரீட்சை தமிழில் எழுதலாம்

ராஜ்ய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் பல்வேறு போட்டி பரீட்சைகளுக்கு ஆஜராகும் மாணவர்களனைவரும், அவர்கள் தமிழைப் போதனு மொழியாகக் கொண்ட பட்டதாரிகளாக இருந்தாலும் சரி, அன்றி இல்லாவிட்டாலும் சரி, தமிழில் பதில் எழுத அனுமதிக்கப் படலாம் என்று சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறது.

ஆங்கிலக் கட்டுரை (காம்போஸிஷன்) தவிர இதர பரீட்சைகளை தமிழில் எழுத அவர்கள் அனுமதிக்கப்படலாம்.

ராஜ்ய பப்ளிக் சர்விஸ் கமிஷன் சிபாரிசை ஏற்றுக் கொண்டு இந்த உத்தரவை சர்க்கார் பிறப்பித்திருக்கிறது.

தமிழைப் போதனு மொழியாகக் கொண்டு பாடங்களைப் படித்த மாணவர்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களில் வாய்ப்புகளைப் பெறுவது சம்பந்தமான பிரதிகூலமான நிலை ஏற்படாதிருக்க வேண்டும் என்பதில் கமிஷனும், சர்க்காரும் அக்கறை கொண்டுள்ளது.

# நீவிர் அறிவீரா?

## கொள்ளைக் கோஷ்டியைச் சமாளித்த தாத்தா!

பேருக்கு மேலிருந்த ஒரு கொள்ளைக் கோஷ்டியின் பிடிவாதமான முயற்சியை 75 வயதான ஒரு முதியவர் தம்மிடமிருந்த ஒருவரின் துணையை மட்டுமே கொண்டு முறியடித்திருக்கிறார்.

அவர் பெயர் சர்தார் விக்ரம் சிங் கொள்ளைக்காரர்கள் தாக்கியதால் ஏற்பட்ட காயங்களுடன் அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். ஆஸ்பத்திரியில் அவரைப் பேட்டி கண்ட நிருபர்களிடம் அவர் வெளியிட்ட விவரங்கள் வருமாறு:

12 பேருக்கு மேல் இருந்த ஒரு கொள்ளைக்கோஷ்டி அவர் வீட்டில் கொள்ளையடிக்க வந்தது. வீட்டிலுள்ள மற்றவர்கள் வந்து தடுக்கும் வரை மட்டும் ஒண்டியாகவே அவர்களைச் சமாளித்து வந்தார்.

வீட்டிலுள்ளவர்கள் வந்து கொள்ளையர்களில் ஒருவனைப்பிடித்துக் கொண்டு அவனிடமிருந்த இரட்டைக்குழல் துப்பாக்கியையும் 21 குண்டுகளையும் கைப்பற்றினர்.

கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்கள் தப்பியோடி விட்டனர். அவர்களைப் போலீசார் தேடி வருகின்றனர்.

## பெண் டாக்ஸி டிரைவர்கள்

சென்னையில் பெண்கள் டாக்ஸி டிரைவர்களாவதற்குத் தடை எதுவும் இல்லை என்று போலீஸ் கமிஷனர் இன்று கூறினார்.

ஆனால் இத்தொழிலை மேற்கொள்ள பெண்கள் யாவரும் முன் வரவில்லை. எனவே பெண்கள் டாக்ஸி டிரைவர்களாகும் பிரச்னை இல்லை என்று அவர் சொன்னார்.

நேபிள்ஸில் நடந்த கருத்தரங்கைப் பற்றி நிருபர்களிடையே அவர் பேசுகையில் கேள்வியொன்றுக்குப் பதிலளித்தார்.

நகரில் போக்குவரத்து விபத்துக்களைப் பற்றிய புள்ளி விவரப்படி பெண்கள் பத்திரமான டிரைவர்களாக உள்ளனர். பிரயாணிகளிடம் அவர்கள் மரியாதையாகவும் நடந்து கொள்வர். எனினும் நீண்ட தொலைவு கார்களை ஓட்டிச் செல்ல பெண்களால் இயலாது. கர்ப்பம் போன்ற அம்சங்கள் அவர்களது அலுவலைப் பாதிக்கும் எனக் கருத்தரங்கில் விளக்கப்பட்டதாகப் போலீஸ் கமிஷனர் குறிப்பிட்டார்.

## புறாவின் பாசம்

மாகாய் ரயில்வேபாலம் விபத்து நடந்து 60 மணி நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. விபத்தில் மாண்ட ஒருவரின் சடலத்துக் கருகில் 7

புறுக்கள் இடைவிடாமல் காவல் காத்து வருகின்றன.

இறந்தவர் கோரக்பூர் கம்பெனி ஒன்றில் குமாஸ்தா. அவர் அலகாபாத்துக்குப் போவதற்காகத்தான் வளர்த்த புறுக்களைக் கூண்டில் கொணர்ந்திருந்தார். ரயில் விபத்தில் கூண்டு உடைந்தது. ஆனால் புறுக்கள் பறந்தோடவில்லை சடலத்தைச்சுற்றி துக்கம் காக்கின்றன இரை தேடியும் போகவில்லை. சடலத்தை எடுக்க வந்தவர்களையும் அருகில் வரவிடாமல் கொத்தத் தொடங்கின. அவ்வளவு பாசம், வளர்த்த யஜமானிடம்.

## காய்ந்தாலும் பேய்ந்தாலும் தாங்கும் 'ட்யூப்லேட்'

பலத்த காற்று, கொட்டும் மழை, அல்லது கடும் பனி போன்ற இயற்கைச் சூழ்நிலைகளால் சிறிதும் பாதிக்கப்படாத புதுவகை 'டியூப் லேட்' (குழாய் பல்புகள்) இப்போது பிரிட்டனில் தயாரிக்கப்படுகிறது.

பல்வேறு திறன்கள் அளவில் தயாரிக்கப்படும் இந்த வகை குழாய்ப்பல்புகளை காற்றழுத்தம், ஆவி நீராவி நிறைந்துள்ள தொழிற்சாலை அறைகளிலும், பயன்படுத்தலாம். வண்ணக் கலவை ஸ்ப்ரே' வேலைகள். மூலாம் பூசுவது, மற்றும் கண்ணாடி சீசாக்களை சுத்தம் செய்வது போன்ற வேலைகள் மேற்கொள்ளப்படும் தொழிலகங்களில் சம்பந்தப்பட்ட அறைகளில் காற்றழுத்தம் செய்யப்பட்ட சிலிண்டர்கள், நீராவி இயந்திரம் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன அல்லவா? அந்த அறைகளிலும் பயமின்றி இந்தப் புதுவகை டியூப்லேட்களைப்பயன்படுத்தலாம்.

## நீருக்கடியில் தானியத்தைச் சேமித்துப் பஞ்சப் பேயை விரட்டலாம்

ஜப்பான் நீருக்கடியில் தானியங்களைச் சேமித்துவைக்கும் சோதனைகளில் ஈடுபட்டிருக்கிறது. இந்தியாவிலும் பிறநாடுகளிலும் கிடங்குகள் மீது படையெடுக்கும் எலிகள், மற்றும் பூச்சிகளின் ஆபத்திலிருந்து தப்புவதற்கு அச் சோதனைகள் உதவலாம்

அரிசியையும். பிற தானியங்களையும் ஏரிக்கடியில் சேமிக்கும் ஓர் ஏற்பாட்டைக் கியோட்டோப் பல்கலைக் கழகத்திலுள்ள விஞ்ஞானியர் செய்துள்ளனர் என்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது. அவர்கள் பைவா ஏரியிலுள்ள, ஆசாகி-முரா என்ற இடத்திற்கப்பால் சுமார் 600 மீட்டர் தொலைவில் ஓரிடத்தில் களச்சோதனைகளைத் தொடங்கியுள்ளனர்.

அவர்கள் ஒவ்வொன்றும் 15 டன் எடையுள்ள காற்றுப்புகா உலோகக் கலங்களுக்குள் அரிசி, நெல், சோயா, அரிசி, நெல், கோதுமை, பார்லி ஆகியவற்றை அடைகின்றனர் என்று கூறப்படுகிறது. காற்றுப்புகாதவாறு பாலித்திலீனை அடுக்கடுக்காகச் சுற்றி அடைக்கின்றனர்.

இக் கலங்களை நைலான் கயிறுகளைக் கொண்டு மிதவைகளில் கட்டித் தண்ணீரில் 30 மீட்டர் ஆழத்திற்குத் தொங்க விடுகின்றனர்; அப்படியே ஓராண்டு விட்டு விடுகின்றனர். அக்காலத்தில் கலத்திலுள்ள தானியத்தின் மாதிரியை எடுத்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சோதிக்கின்றனர்.

நீருக்கடியில் தானியங்களைச் சேமிப்பது, வழக்கிலுள்ள சேமிப்பு முறைகளைவிடப் பல வழிகளில் சாதகமானதாகும். சான்றாக நீரின் வெப்ப நிலை ஆண்டு முழுவதிலும் அவ்வளவாக மாறுவதில்லை.

புயல், சூறாவளி, வெள்ளம் மற்றும் பிற இயற்கை நாசங்களின் போது, இவ்வாறு நீருக்கடியில் சேமித்து வைப்பது பாதுகாப்பாயிருக்கும். எலிகள், புழுக்கள் முதலியவற்றாலும் சேதம் ஏற்படாது

ஜப்பானியச் சோதனைகள் வெற்றி பெறுமாயின், 'பசியை எதிர்த்து உலகெங்கிலும் நடந்து வரும் போரில், அது முக்கியமான நடவடிக்கையாயிருக்கும்'' என்று இங்குள்ள வேளாண்மைத் தகவல் அதிகாரி யொருவர் கூறினார்.

—"தினமணி"

"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு.
மண்ணடி, சென்னை-1

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-00

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-50

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2 50

Form of Certificate of income

தபால் செலவு பிரத்தியேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல பாரங்களை அனுப்பத் தபால் செலவு:

25 பாரங்களுக்கு 15 nP.
50 பாரங்களுக்கு 30 nP
75 பாரங்களுக்கு 50 nP
100 பாரங்களுக்கு 70 nP

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ரூபாய்க்கு 3 ந. பை.
விற்பனை வரியுண்டு.

# இருதய நோயைத் தடுக்க முடியுமா?

[ எஸ். எல். எஸ். ]

●

நமது இருதயம் ஓர் ஆச்சரியகர மான வேலை செய்யும் உறுப்பு. ஒரு நாளைக்கு அது சுமார் எட்டாயிரம் லிட்டர் இரத்தத்தை உடல் முழுவதும், 'பம்ப்' செய்து அனுப்பிவைக்கிறது. சுமார் எழுபது வயது வரை வாழும் ஒரு மனிதனின் ஆயுட் காலத்தில், அது இருபது கோடி லிட்டர் இரத்தத்தை 'பம்ப்' செய்து கொண்டே இருக்கிறது! இந்தக் கடும் வேலையில் அது ஒரு கண நேரம் கூட ஓய்வு எடுத்துக் கொள்ள முடிவதில் அதை யாரும் பழுது பார்ப்பதில்லை; தனிப் படக் கவனிப்பதில்லை. ஆனாலும் அது குறிப்பிட்ட அளவில், ஒழுங்கான துடிப்புடன், தன் வேலையைச் செய்து வருகிறது.

ஒவ்வொரு நாளும் இருதய நோய் ஏற்பட்டு (Heart Attack) உயிர் இழப்பவர்களைப் பற்றி நாம் கேள்விப் படுகிறோம்? "அது அவ்வளவு கொடிய வியாதியா? அதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள முடியாதா?" என்றும் நினைக்கிறோம். இன்றைய மருத்துவத்தில் அது சாத்தியமானதே. இருதய நோய் மரணத்தை விளைவிக்கும் என்று நாம் அஞ்சவேண்டியதில்லை. தகுந்த சிகிச்சை, மருத்துவ முறைகள், உரிய உணவுப் பழக்கங்கள், அளவான தேகப் பயிற்சி ஆகியவற்றின் மூலம் இருதய நோய் ஏற்பட்டவர்களும் மீண்டும் நல்ல உடல் நலம் பெற்று வாழ முடியும். மேல் நாடுகளில் பழுதடைந்த இருதயத்துக்குப் பதிலாகப் புதிய இருதயம் ஒன்றையே பொருத்தக் கூடிய அளவுக்குச், சிகிச்சையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்.

ஆனாலும் இருதய நோயைத் தடுக்க முடியாதா? அதற்கு நம்மைத் தயார் செய்து கொள்வது எப்படி? இவற்றை இப்போது இங்கே பார்க்கலாம்.

நமது இருதயத்திற்கு இரத்தக் குழாய்கள் மூலம் வந்து சேரும் சத்து, திடீரென்று குழாய் அடைபட்டு நின்று போகிறது. இருதயம் முன் அறிவிப்பு எதுவும் இன்றி 'சட்' டென்று வேலையை நிறுத்தி விடுகிறது. இது மரணத்துக்குக் காரணமாகிறது. இந்த நிலை (Heart Attack) பொதுவாகப் பெண்களை விட ஆண்களுக்கே அதிகமாக நேரிடக் கூடியது. நாற்பத்தைந்து வயதுக்குப் பிறகு ஆண், பெண் இருபாலாருக்கும் இந்தச் சந்தர்ப்பம் சம அளவில் நேரிடலாம்.

அளவுக்கு மீறிய உடல் பருமன் இதற்கு ஒரு முக்கியமான கார

ணம். வயது, உயரம் இவற்றுக்கு ஏற்றபடி இருக்கவேண்டிய உடல் நிறை உண்டு. இதை விட அதிக மாக உடல் நிறை இருக்குமானால் அதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி அதிகமாகச் சாப்பிடுதல், அசையாமல் தொடர்ந்து ஓரிடத்தில் உட்கார்ந்திருத்தல் ஆகியவை உடல் பருமனுக்கு வழிகாட்டும். உதாரணமாக ஒரு பஸ் ஓட்டும் டிரைவருக்கு இந்த நிலை ஏற்படலாம். அவருடன் வரும் ஓடியாடும் கண்டக்டருக்கு ஏற்படாது!

உடல் பருமன் அதிகமானால், உடல் முழுவதும் இரத்தம் பெற வேண்டிய திசுக்களின் (Tissues) அளவு அதிகமாகிறது. ஆகவே, இரத்தம் செய்ய வேண்டிய வேலை அதிகமாகிறது. இந்த அதிக வேலை இருதயத்தைப் பலவீனம் அடையச் செய்கிறது. உணவுப் பொருளை வீணாக்கக்கூடாது என்று சில சமயம் நாம் அதிகமாக உண்கிறோம். உடலுக்கு வெளியே வீணாகும் உணவுப் பொருளால் உபத்திரவம் இல்லை. உடலுக்குள் அதிகமாகி வீணாகும் உணவுப் பொருள் ஆபத்தைத் தோற்றுவிக்கிறது.

எப்படிப்பட்ட உணவு பொருத்த மானது? சரியானது? அரிசிக்குப் பதிலாகக் கோதுமையைச் சாப்பிடுவது நல்லது என்று பொதுவாக நினைப்பதுண்டு. இது மட்டும் போதுமான தல்ல. உணவின் அளவு குறைந்தால் ஒழிய, அரிசிக்குப் பதில் கோதுமையைச் சாப்பிடுவது மட்டும் பயன்தராது. நாம் உண்ணும் உணவை, நாம் செய்யும் வேலைகளும் உடற் பயிற்சிகளும் எரித்துப் பயன்பட வைக்கின்றன. வேலை செய்யாமல் உணவை மட்டும் உட்கொள்ளும் போது, அதிகமாக மிச்சப்படும் சக்தி கொழுப்பாக மாறி, தேவையில்லாத இடங்களிலெல்லாம் உடலில் சதைபோட ஆரம்பிக்கிறது.

நமது உணவில் மாவுப் பொருள், புரதம், கொழுப்பு எல்லாம் சேர்ந்திருக்கின்றன. இவை யாவுமே நமக்குச் சக்தியைக் கொடுப்பதற்காக ஏற்பட்டவை. இந்தச் சக்தியை நாம் கலோரிகள் என்ற அளவில் கணக்கிடுகிறோம். நாம் சாப்பிடும் ஒவ்வொரு கிராம் மாவுப் பொருள், புரதம் இவை சுமார் நான்கு கலோரி சக்தியை உண்டு பண்ணக் கூடியவை. நம் உடலிலிருந்து ஒரு கிராம் நிறையுள்ள கொழுப்பை அகற்றவேண்டுமானால், நாம் ஒன்பது கலோரி அளவு சக்தியைச் செலவிட வேண்டும். இதிலிருந்து நாம் எவ்வளவு எளிதில் உடல் நிறையைக் கூட்டிக் கொண்டு விடலாம் என்பதையும், குறைக்க எவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். உடல் உழைப்புதான் நிறையைக் குறைக்கும். மூளை வேலை செய்வதால் மட்டும் செலவாகும் சக்தி குறைவானதே.

நமது உணவு காய்கறிப் பொருள் மட்டும் (Vegetarin) கொண்டதாக இருப்பது நல்லதா? மாமிசப் பொருள் சேர்ந்திருப்பது நல்லதா? பொதுவாகநம்மிடையே காய்கறிப்

பொருள் உண்பவர்களே அதிகம். மாமிசப் பொருள் உண்பவர்களும் கூடப் பெரும்பாலும் மற்ற உணவையேஉண்கிருர்கள் ஒருசிறிதளவு மாமிசப் பொருள் சேருகிறது; அவ்வளவுதான். அநேகம் பேர் ஒரு சில வேளைகளிலும், ஒரு சில நாட்களிலும் மட்டுமே மாமிசம் உண்கிருர்கள். ஆகையால் இந்த வழக்கங்களில் அதிக வித்தியாசம் இல்லை. ஆனுல் தினந்தோறும், கணிசமான அளவு மாமிசப் பொருளை உணவில் சேர்த்துக் கொள்வது. இருதயநோய்க்குத் தூண்டுகோலாக இருக்கும் பொருளை (Blood Cholestelor) அதிகப்படுத்துகிறது. இதே போல் சாதாரணமான வெப்பநிலையில் உறைந்து போகக் கூடிய எண்ணெய் வகைகள் எதுவும் கெடுதல் உண்டாக்கக் கூடியனவே. இவை இருத்யத்தின் தசைகளுக்கு இரத்தம் அனுப்பும் குழாய்களை அடைத்துக் கொள்ளக் கூடிய பொருளைத் தாயார் செய்து, நோயைத்தோற்றுவிக்கின்றன. சத்து மிகுந்த பருப்பு வகைகளும் அதே போலக் கெடுதல் செய்யக் கூடியவைதான்.

மாமிசப் பொருட்களில், பிராணிகளின் குடல் பகுதி, மூளைப்பகுதி, சிறு நீரகம் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டியவை. ஏடு நிறைந்த பால், பாலாடைக்கட்டி, இறுகிய வெண்ணெய் ஆகியவையும்இத்தகையன. அதிக அளவு சர்க்கரையைத் தவிர்ப்பதும் நல்லது. உடல் சதையைக் குறைக்க தேகப் பயிற்சி நல்லது. ஆனுல் அதன் மூலம் பசி அதிகமாகி, மேலும் உணவை அதிகமாக உட்கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தூக்கம் சக்தியைச்சேமித்துவைக்கிறது. அதிக நேரம் தூங்குதல், பகலில் தூங்குதல் ஆகியவை பருமனை அதிகரிக்கச் செய்யும்.

உணவுப் பழக்கங்களைத் தவிர வேறுபல காரணங்களும் இருதய நோய்க்கு வழி செய்யக் கூடும். கவலைகள் நிறைந்த துரிதமான வாழ்க்கை இருதயத்துக்குக் கெடுதல் செய்யக் கூடியது. பின் தங்கிய நாட்டில் வாழ்பவர்களைவிட முன்னேற்ற மடைந்த நாடுகளில் வாழ்பவர்களைத்தான் அதிகமாக இந்த நோய் பாதிக்கிறது. அமைதியான வாழ்க்கையும், பொறுமையான சுபாவத்தையும் முக்கியமாக நாம் தேடிக் கொள்ள வேண்டும்.

ஒருவருடைய முன்னோர்களுக்கு இத்தகைய வியாதி இருந்திருந்தால் வம்ச வழியாகக் குழந்தைகளுக்கும் இது நேரக் கூடும். அந்த நிலையில் ஆரம்பத்திலிருந்தே பாதுகாப்போடு இருப்பது நல்லது. இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் இருதய நோய் சீக்கிரமாகவும் இளம் வயதிலும் கூட நேரக் கூடியது. ஆகவே, அந்த நிலையில் இருப்பவர்கள் பாதுகாப்புடன் இருப்பது நலம்.

குடிப் பழக்கம், அளவுக்குமீறும் போது இருதயத்துக்குக் கெடுதலையே செய்கிறது. இருதயத்தின் தசைகள் தமது இயல்பான விறுவிறுப்பை இழந்து மந்த நிலையை அடையவும், அசைவு சிரமமாகும் படி ஆகிவிடவும், குடி தரும்

போதை நிலை காரணமாகிறது. புகையிலை—குறிப்பாக சிகரெட் பிடிக்கும் பழக்கம் நிச்சயம் கெடுதலானது. இருதயத்துக்கு இரத்தம் அளிக்கும் குழாய்களைக் குறுகலாக்கவும், அடைக்கவும் இது வழி கோலுகிறது. சிகரெட் பிடிக்கும் பழக்கமில்லாதவர்களைப் போல ஒன்றரைப் பங்கு அதிகமாக, சிகரெட் பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களை இந்த நோய் பாதிக்கிறது.

பொதுவாக இருதய நோய் (Heart Attack) பார்திக்கும் போது மூவரில் ஒருவர் டாக்டர் வந்து சேருமுன்பே இறந்து விடுகிறார்; டாக்டர் வந்த சில நிமிஷங்களுள் மரணம் ஏற்படுவது மற்றொரு பங்கு; மூன்றில் ஒருவருக்கு மட்டுமே சிகிச்சை பெறும் வாய்ப்புக் கிடைக்கிறது. இருதயநோய்த் தோன்றும்போது, உடனடியாக முதலுதவி தெரிந்தவர்கள் இந்தச் சிகிச்சை முறைகளைக் கைக் கொள்ளலாம்.

1. மார்புப் பகுதியில் இரண்டு மூன்று தடவை, சற்றுப் பலமான அறைகள் கொடுக்கலாம். இது சரியான மூச்சையும், நாடித் துடிப்பையும் மீட்குமானல் நல்லது. இல்லையானல்......

2. வாய்க்கு வாய் வைத்து செயற்கைச் சுவாசம் அளிக்கலாம். அவருடைய மூக்கை இறுகப் பிடித்துக் கொண்டு, வாய்க்குள் ஆழ்ந்து மூச்சு விட்டு, சுவாசத்தைத் தொடங்க முயலலாம்.

3 மார்பெலும்பின் கீழ் இரண்டு கைகளையும் வைத்து, இருதயப் பகுதியைச் சுமார் நிமிடத்துக்கு எழுபது தடவை அழுத்தித் தேய்த்து விடுங்கள்.

4. எவ்வளவு விரைவில் டாக்டரைக் தருவிக்க முடியுமோ, அது நல்லது.

இருதயத்தின் சிகிச்சைக்கும், துடிப்பை அளக்கவும், நோயின், அறி குறிகள், நிலைகள் ஆகியவற்றைக் கணக்கிடவும், இன்றைய மருத்துவத்தில் கருவிகளும், இயந்திரங்களும் பல இருக்கின்றன. அவற்றைக் கொண்டு டாக்டர்கள் நோய்க்குத்தக்க சிகிச்சை செய்ய வழிகள் இருக்கின்றன. ஆயினும் செல்வந்தர்கள் முதல் ஏழைகள் வரை, இருதய நோய் சகஜமாகப் பரவியுள்ள இன்றைய நிலையில், முன் ஜாக்கிரதையாக இருப்பது தான் புத்திசாலித்தனமானது.

"மிதமான உணவுப் பழக்கங்கள், அளவான தேகப் பயிற்சி, அமைதியான வாழ்க்கை, குடிப்பது, புகைப்பது போன்ற பழக்கங்கள் இல்லாதிருத்தல் ஆகியவை நல்ல காப்பு முறைகள். நாற்பது வயதுக்குப் பிறகு சேர்ந்த டாக்டர்களிடம் அவ்வப்போது சோதனைகள் செய்து கொள்வது நலம்" என்று கூறுகிறார். சென்னை பொது மருத்துவ மனையில், இருதய சிகிச்சைப் பகுதியில் பணி புரிந்து வரும் டாக்டர் கணேஷ்.

—"ஆனந்த விகடன்"

# தென் ஆப்பிரிக்காவில் இருபது ஆண்டுகள்

[ திருமதி புஷ்பா ராணி ]

❋

(1893 ஏப்ரலில் காந்திஜி இந்தியாவிலிருந்து தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். அங்கிருந்த இந்திய இனத்தவர் மேற்கொண்ட இன ஒதுக்கல் எதிர்ப்புப் போராட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார்; அவர் நடத்திய இயக்கங்களின் சிறப்பு அம்சங்களை இந்தக்கட்டுரை விளக்கிக் கூறுகிறது.)

மனைவி கஸ்தூர்பாவையும் இரு குழந்தைகளையும் 1893 மே மாதத்தில் இந்தியாவில் விட்டு விட்டு காந்திஜி தென் ஆப்பிரிக்கா போய்ச் சேர்ந்தார். அப்போது அவருக்கு 24 வயது. தியேப் ஸேட் என்பவருக்கு எதிராக தாதா அப்துல்லா ஸேட் தொடர்ந்த வழக்கில் அப்துல்லா ஸேட்டுக்காக, வாதாடுவதற்கென வழக்கறிஞரான அவர் சென்றார்.

அங்கு ஓராண்டு இருக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார். ஆனால், 1914 வரை சுமார் 20 ஆண்டுகள் - அவர் அங்கு இருந்தார். அவரது வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. உண்மையில் அங்கு ஒரு புதிய காந்தி பிறந்தார்.

இந்த நீண்ட காலத்தில் காந்திஜி அவ்வப் போது இந்தியாவுக்கு வந்து சென்றார். இந்தியத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார். இருப்பினும் தென் ஆப்பிரிக்கா தான் அவரது அலுவல்களின் மையப் பகுதியாக இருந்தது.

டர்பன் போய்ச்சேர்ந்ததும் காந்திஜீயின் சோதனைகளும் இன்னல்களும் அதிகரித்தன. அந்த நாடு நிறம், இனம், வகுப்பு, சமயம், தொழில், விருப்பு வெறுப்புக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிந்து கிடந்தது. இன விருப்பு வெறுப்புக்கள் மேலோங்கிநின்றன. மேலும் தீவிரமாகப் போராட வேண்டும் என்று அவரது எண்ணம் இந்தஇன்னல்களினால்மேலும் தீவிரமாயிற்று. தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களை இன்னல்நிறைந்த சூழ்நிலையில் அப்படியே விட்டு விட்டு இந்தியா திரும்புவது கோழைத்தனம் என்று அவர் கருதினார்.

தென் ஆப்பிரிக்கா போய்ச்சேர்ந்ததும் அவர் பல கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தார். உண்மையைத் தான் பேச வேண்டும்; சுத்தமான பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வேண்டும்; ஜாதி மதங்களை மறந்து ஆப்பிரிக்க மொழிகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் மக்களை அறிவுறுத்தினார்.

ரெயிலில் செல்லும் இந்தியர்கள் அவமானத்திற்குள்ளாவது பற்றி பிரிட்டோரியா ரெயில்வே நிர்வாகத்

தினருக்கு அவர் எழுதினார். விரும்பினால் இந்தியர்கள் முதல் வகுப்பிலோ இரண்டாவது வகுப்பிலோ பிரயாணம் செய்யலாம் என்று ரெயில்வே நிர்வாகத்தினர் வாக்குறுதி கொடுத்தார்கள்.

சட்ட சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதாக வாக்குப் பதிவு செய்யும் உரிமை ஒரு சில இந்தியர்களுக்கே இருந்தது. 1894ல் நேத்தாலில் சுமார் 250 இந்தியர்களுக்குத்தான் வாக்குரிமை இருந்தது. நேத்தால் சட்டசபையின் ஒரு தீர்மானத்தினால் இந்த உரிமையும் பறிக்கப்பட்டது. காந்திஜி இதை எதிர்த்தார். இன அடிப்படையில் ஒதுக்கல் முறைகளை நீக்குவதற்கு வகை செய்யும் சட்டம் ஒன்றை இயற்றுமாறு 1897-ல் நேத்தால் சட்டசபையைக் கட்டாயத்துக்குள்ளாக்கினார். இந்தியர்கள் உள்பட பிரிட்டிஷ் பிரஜைகள் அனைவருக்கும் சம வாக்குரிமை வழங்கப்பட்டது.

தென் ஆப்பிரிக்காவில் இருந்த இந்திய இனத்தவரின் தலைவரானார் காந்திஜி. மிகச் சிறந்த அமைப்பாளர் என்பதை நிரூபித்தார். அஹிம்சையையும் சத்தியத்தையும் ஆயுதங்களாகக் கொண்டு விரோதிகளின் விவேகத்தையும் அறநெறிகளையும் நம்பி அவற்றிடம் வேண்டுகோள் விடுத்தார்.

நிறத்தின் அடிப்படையில் இருந்த இன ஒதுக்கல் கொள்கையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே அவரது நோக்கமாக இருந்தது. இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு சத்தியாக்கிரக முறையைத் தேர்ந்தெடுத்தார். "சத்தியாக்கிரகம்" என்ற சொல்லை தென் ஆப்பிரிக்காவில்தான் அவர் உருவாக்கினார். மிகவும் வலிமை உள்ளவர்களின் ஆயுதம் இது. எந்த விதத்திலும் வன்முறை இதில் அடங்காது. தம்முடன் நல்லபடி நடந்து கொள்ளாத வெள்ளையர்களையும், தம்மைக் கொலை செய்ய நினைத்த வெள்ளையர்களையும் அவர் மன்னித்தார். 1897 ஜனவரியில் ஆத்திரமடைந்த கூட்டத்தினர் அவர் மீது கற்களையும் முட்டைகளையும் வீசி எறிந்தனர். "கொளுத்தி விடுவோம்" என்று கூச்சலிட்டனர். அப்பொழுது காலனி இலாகா பொறுப்பைக் கவனித்து வந்த பிரிட்டிஷ் மந்திரி சேம்பர்லேன் காந்தியை தாக்கியவர்களுக்கு எதிராக வழக்கு தொடர வேண்டும் என்று நேத்தால் நிர்வாகத்தினரை கேட்டுக் கொண்டார். ஆனால் இவ்வாறு வழக்குத்தொடர்ந்தால் தாம் ஒத்துழைக்கப் போவதில்லை என்று காந்திஜி கூறினார். நேத்தால் அரசாங்கமும் தலைவர்களும்தான் தவற்றுக்குக் காரணம் என்றும், தாக்கியவர்கள் அல்ல என்றும் காந்திஜி கூறினார்.

தென் ஆப்பிரிக்க டச்சுக்காரர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையே 1899 லிருந்து 1902 வரை தென் ஆப்பிரிக்காவில் போயர் போர் நடந்தது. காந்தி டச்சுக்காரர்களிடம் பரிவு கொண்டிருந்தார் என்ற போதிலும் மனிதாபிமானச் செயலுக்குத்தான் முதலிடம் கொடுத்தார். சுமார் 1100

பேரைக்கொண்ட இந்திய சிகிச்சை அணி ஒன்றை அவர் அமைத்தார். இதற்குக் காந்திஜியே தலைவராக இருந்தார். இது சிறப்புப் பணி புரிந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தையும் இதுமிகவும் கவர்ந்தது.

1901-ல் காந்திஜி குடும்பத்துடன், இந்தியாவுக்கு வந்து பம்பாயில் தங்கினார். ஆனால், தென் ஆப்பிரிக்காவுக்குச் செல்ல விருந்த காலனி இலாகா மந்திரி செம்பர்லேனிடம் தென் ஆப்பிரிக்காவில் இருந்த இந்திய இனத்தவர் தமது குறைகளை எடுத்துச் சொல்வதற்காக காந்திஜியை அழைத்தார்கள். காந்திஜி அங்கு சென்றார். போயர் போரின்போது இந்தியர்கள் செய்த நற்பணியை மறந்துவிட்டார்கள் என்பதை அறிந்து காந்திஜி மிக வருந்தினார், இந்தியர்களின் நிலைமை நாளுக்குநாள் மோசமாயிற்று. அவர்கள் மேலும் பல இன்னல்களைத் தாங்க வேண்டி இருந்தது. இந்தியர்களின் இன்னலைத் தீர்ப்பதற்கான காலனி இலாகா மந்திரி எதுவுமே செய்யவில்லை.

தென் ஆப்பிரிக்காவில் இருந்த இந்தியர்களின் பிரச்னைகள் பற்றியும் இன்னல்கள் பற்றியும் மக்களிடம் எடுத்துக் கூறுவதற்கென 1903-ல் காந்திஜி 'இந்தியன் ஒபீனியன்'' (இந்தியன் கருத்து) என்ற வாரப் பத்திரிகையைத் துவக்கினார். காந்திஜிதான் அதன் ஆசிரியராக இருந்தார். செலவுகளையும் அவரே ஏற்றுக் கொண்டார்.

இந்தியர்கள் விஷயத்தைக் கவனித்துக் கொள்ளும்பொருட்டு டிரான்ஸ்வல் அரசாங்கம் ஆசிய இலாகா ஒன்றைஅமைத்திருந்தது. 1904, 1905, 1906 ஆண்டுகளில் இந்த இலாகா இந்தியர்களுக்கு எதிரான பல விதிமுறைகளைக் கொண்டு வந்தது. 1907 ஜனவரியில் தென் ஆப்பிரிக்க டச்சுத் தலைவர் ஜெனரல் போத்தா பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தமது கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் நாலு ஆண்டுகளில் நாட்டிலிருந்து கூலிகளை வெளியேற்றுவதாக அறிவித்தார். முன்னதாக 1906-ல் ஸ்மட்ஸ் பேசுகையில் ஆசிய புற்றுநோயை உறுதியுடன் ஒழிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்தியர்கள் அனைவரும் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும், கைரேகை எடுத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்றும், எப்போதும் தங்களுடன் அடையாளச் சான்றிதழ் ஒன்றை வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் கட்டாயப் படுத்தும் அவசரச் சட்டத்தின் நகல் வாசகத்தை 1906 டிரான்ஸ்வல் அரசாங்கம் வெளியிட்டது. தெருவில் செல்லும் இந்தியப் பெண்ணிடம் போலீஸ் அதிகாரி விசாரணை செய்வதற்கும் அவளது வீட்டிற்குச் சென்று பதிவு தஸ்தாவேஜைக் கோருவதற்கும் இந்த அவசரச் சட்டம் அதிகாரம் அளித்தது.

இந்த மசோதாவை எதிர்க்கும் வகையில் 1906 செப்டம்பர் 11-ஆம் தேதி ஜோஹன்ஸ்பார்க்கில் இந்தியர்களின் கூட்டம் ஒன்று

நடந்தது. போராட்டத்தின் முழுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதாக காந்திஜி கூறினர். அநியாயமான சட்டத்திற்குத் தலைவணங்குவதைவிட இறப்பதே மேல் என்று அவர் கருதினர். போராட்டம் துவங்கிய பின் சிறைச்சாலைகளில் இந்தியர்கள் கூட்டம் பெருகியது. சிலரை அரசாங்கம் நாட்டிலிருந்து வெளியேற்றியது. காந்திஜி கைது செய்யப்பட்டார்.

இச்சட்டத்தின்படி இந்தியப் பெண்கள் பதிவு செய்து கொள்ள வேண்டாம் என்று டிரான்ஸ்வல் அரசாங்கம் பிறகு சலுகை வழங்கியது.

ஆசிரியர்களுக்கு எதிரான டிரான்ஸ்வல் மசோதாவுக்குத் தாம் ஒப்புதல் அளிக்கப் போவதில்லை என்று பிரிட்டிஷ் காலனி இலாகா மந்திரி அறிவித்தும் கூட அதைப் பொருட் படுத்தாமல். 1907, ஜூலை 31ஆம் தேதி இந்த மசோதா அமலுக்கு வந்தது. 1907 ஜனவரி முதல் தேதியன்று டிரான்ஸ்வல் பிரிட்டிஷ் காலனி ஆட்சியிலிருந்து விடுபட்டதும் டிரான்ஸ்வல் அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரலாம் என்று எல்ஜின் பிரபுலண்டனில் டிரான்ஸ்வல் கமிஷனரிடம் கூறியிருந்தார். அவர்கள் இதைத் தான் செய்தார்கள். இது ஒரு "கபடமான கொள்கை" என்று காந்திஜி குறிப்பிட்டார்.

ஜனவரி 30-ம் தேதி ஜெனரல் ஸ்மட்ஸின் அழைப்பிற்கிணங்க பிரிட்டோரியாவில் அவரைக் காந்திஜி சந்தித்தார். இந்தச் சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்று காந்திஜி கோரினர். கூட்டத்தில் உடன்பாடு ஏற்பட்டது. காந்தி - ஸ்மட்ஸ் உடன்படிக்கையின்படி இந்தியர்கள் தாமாகவே பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டது. ஆசிரியர்களுக்கெதிராக சட்டம் விலக்கிக் கொள்ளப்படும் என்று ஜெனரல் ஸ்மட்ஸ் வாக்குறுதி அளித்தார். கட்டாய பதிவுச் சட்டத்தை அப்படியே வைத்திருந்து இஷ்டபூர்வ பதிவு அலுவல்களும் செல்லுபடியாகும் என்று ஒரு மசோதா கொண்டு வந்தார் மேலும் மக்கள் குடியேறுவதை புதிய மசோதா தடை செய்தது

1908 ஆகஸ்ட் 16-ஆம் தேதி ஜோஹன்ஸ்பர்க்கில் நடந்த ஒரு கூட்டத்தில் ஆயிரக் கணக்கான பதிவுச் சான்றிதழ்கள் கொளுத்தப் பட்டன. அரசாங்கத்துக்கும் சத்தியாக்கிரகிகளுக்குமிடையே தீவிரமான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. பதிவு செய்து கொள்ளப் போவதில்லை என்றும் குடியேறுவதற்கு எதிரான சட்டத்தை மதிக்கப் போவதில்லை என்றும் இந்தியர்கள் தீர்மானித்தார்கள். பலரும் கைது செய்யப்பட்டார்கள், இந்தியர்கள் பலர் வெளியேற்றப் பட்டனர்.

சத்தியாக்கிரகிகளின் குடும்பத்தினருக்கு உதவி செய்யும் நோக்கத்துடனும் சத்தியாக்கிரகிகள் ஒருவருக் கொருவர் இசைந்து வாழ்வதற்காக பயிற்சியளிக்கும் நோக்கத்துடனும், மேலும்பெரிய போராட்டத்துக்கு அவர்கள் ஆயுத்தம் செய்யும்நோக்கத்துடனும் காந்திஜி

1100 ஏகரா நிலப்பரப்பில் டால்ஸ்டாய் பண்ணையை அமைத்தார். காந்திஜியின் ஜெர்மன் நண்பரான கலென்பாக் இந்த நிலத்தை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

மேலும் பெரிய அபாயம் ஏற்படக் கூடிய நிலைமை இருந்தது. தென் ஆஃப்ரிக்க யூனியன் ஒன்றை அமைக்க திட்டமிட்டிருந்தார். டிரான்ஸ்வல் சட்டத்தைப்போல இந்திய எதிர்ப்புச்சட்டங்களை இந்த யூனியன் இயற்றுவதாக இருந்தது. இந்தியர்களுக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு, 1909 ஜூலையில் காந்திஜி இங்கிலாந்துக்குச் சென்றார். ஜெனரல் ஸ்மட்சுக்கும் காந்திஜிக்குமிடையே இருந்த கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்குப் பிரிட்டிஷ் அரசு முயன்றது. ஆனால் ஸ்மட்ஸ் இசையவில்லை. சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தும் பொருட்டு காந்திஜி திரும்பி வந்தார்.

1912 அக்டோபரில் கோபால கிருஷ்ண கோகலே தென்னாப்பிரிக்கா சென்றார். இந்தியர்களின் நிலைமையை மதிப்பிடுவதே இவரது விஜயத்தின் நோக்கமாக இருந்தது. தென் ஆப்பிரிக்கா பற்றி நல்ல எண்ணத்துடன் இந்தியா திரும்ப வேண்டும் என்ற விருப்பத்துடன் அவரை அரசாங்கம் வரவேற்றது. ஜெனரல்போத்தாவுடனும் ஜெனரல் ஸ்மட்சுடனும் கோகலே பேச்சுக்கள் நடத்தினார். அரசாங்கம் இந்திய எதிர்ப்பு சட்டத்தை விலக்கி கொள்ளும் என்றும் தொழிலாளர்கள் மீதான மூன்று பவுன் வருடாந்திர வரி வசூலை நிறுத்தும் என்றும் கோகலே கருதினார். காந்திஜி சந்தேகம் தெரிவித்தார். காந்திஜி நினைத்தது நடந்தது.

தொழிலாளர்கள் மீதான மூன்று பவுன் வரி வசூலை நிறுத்துவதற்கு நேத்தால் ஐரோப்பியர்கள் தயாராக இல்லை என்று சட்டசபையில் ஸ்மட்ஸ் அறிவித்தார். ஸ்மட்சும் போத்தாவும் இவ்வாறு தாங்கள் கொடுத்திருந்த வாக்குறுதிகளை மீறினார்கள். மீண்டும் சத்தியாக்கிரகம் துவக்க இந்தியர்கள் தயாராக இருந்தனர். இச் சமயத்தில் தான் இந்தியர்களுக்கு அதிர்ச்சியூட்டும் நிகழ்ச்சி நடந்தது. கிறிஸ்துவ முறைப்படி நடக்கும் திருமணங்கள் மட்டுமே தென் ஆப்பிரிக்காவில் செல்லுபடியாகும் என்று அங்குள்ள சுப்ரீம்கோர்ட் 1913 மார்ச்சில் தீர்ப்பு கூறியது. தங்களது சொந்த சமய முறைப்படி நடக்கும் திருமணங்கள் செல்லுபடியாகாது என்ற அவமானத்தை தன்மானமுள்ள எவரும் சகித்துக்கொள்ள முடியாது.

தவிர்க்க முடியாத போராட்டம் துவங்கிற்று. ஒப்பந்ததொழிலாளர்களும் இந்தியர்களும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பல இன்னல்களைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. பல தடவை காந்திஜி கைது செய்யப்பட்டார். போராட்டத்தில் பெண்கள் முக்கிய பங்கு வகித்தனர். இங்கிலாந்

[48-ஆம் பக்கம் பார்க்க]

# பல நாடுகளில் 'லாட்டரி'

( வி. கோபாலன் )

அதிருஷ்ட தேவதைக்குச் ஆட்பட்டிருக்கும் நாகரிகப் பெயர்தான் லாட்டரி. 'பலர் பணத்தைச் சிலர் சுருட்டிக்கொள்ளும் பகல் கொள்ளை' என்றும் 'சாதுவான சூதாட்டம்' என்றும் பலராலும் கண்டனம் செய்யப்பட்டுள்ள போதிலும் மக்களுக்கு லாட்டரியின் மீதுள்ள மோகம் குறைந்தபாடில்லை. காரணம், லாட்டரி அதிருஷ்டத்தின் நுழைவாயில் என்று கருதப்படுகிறது. இன்று நேற்றல்ல-பல நூற்றுண்டுகளாகவே மக்கள் லாட்டரியில் ஆசையும் ஆர்வமும் கொண்டிருந்திருக்கின்றனர். ஷேக்ஸ்பியர் எழுதிய 'வென்னிஸ் நகரத்து வணிகர்கள்'' என்ற நாவல் முழுக்க முழுக்க லாட்டரி பாணி சூதாட்டத்தை அடிப்படையாகக் கொண்டது மகா காவியமான ''மகாபாரதம்'' பாண்டவரும் கௌரவரும் சூதாடியதாகக் கூறுகிறது.

சோழ மன்னர்கள் காலத்தில் கிராம நிர்வாகிகள் ''குடவோலை தேர்தல்'' என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தலில் போட்டியிடும் எல்லோரது பெயரையும் ஓலைகளில் எழுதி, அவற்றை ஒரு குடத்தில் இட்டு, பிறகு ஒரு ஓலையை எடுக்கும் அம்முறை ஜனநாயகத் தேர்தலுக்கு முன்னேடி என்ற போதிலும், அதுவும் ஒரு அப்பட்டமான லாட்டரியே ஆகும்.

உலகிலேயே லாட்டரிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வரும் நாடு ஆஸ்டிரியாதான். அங்கு பல நூறு ஆண்டுகளாகத் தனி நபர்கள் பல்வேறு லாட்டரிகளை நடத்தி வந்தனர் 1943-ஆம் ஆண்டில் அரசாங்க அனுமதியுடன் ஒரு நிறுவனம் நாடு முழுவதும் லாட்டரி நடத்த உரிமை பெற்றது. ஆஸ்டிரியாவில் வருடத்திற்கு இரு முறை லாட்டரி நடைபெறுகிறது; ஐந்து மாதத்திற்கு ஒரு முறை ''குலுக்கல்'' நடைபெறுகிறது.

ஆஸ்டிரியா லாட்டரி முறையில் பல சுவையான அம்சங்கள் உள்ளன. ஒவ்வொரு முறையும் ஐந்து வரிசைக்கான டிக்கெட்டுகள் வெளியிடப்படுகின்றன. ஐந்து வரிசைக்குமான பொது டிக்கெட்டின் மொத்த விலை 240 ஷில்லிங். 48 ஷில்லிங்குக்கு ஒரு வரிசைக்கு மட்டுமேயான டிக்கெட்டும் பெறலாம். மேலும், ஒரு டிக்கெட்டின் விலையில் பாதி, கால் பகுதி அல்லது வீசம் பங்கு கொடுத்து அரை டிக்கெட் அல்லது கால், அரைக்கால் டிக்கெட்டும் பெறலாம். இதன் மூலம் 240 ஷில்லிங் கொடுத்து முழு டிக்கெட் வாங்க முடியாதவர்கள்கூட 6 ஷில்லிங்குக்கு அரைக்கால் டிக்கெட் வாங்கிக் கொள்ளலாம். வெற்றி பெற்றுல் முழு பரிசுத் தொகையில் அரைக்கால் பங்கு உண்டு. ஆஸ்டிரியா லாட்டரியில்

முதல் பரிசு 3,00,000 ஷில்லிங்குகளாகும் ஐந்து வரிசை டிக்கெட்டுகளில், ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு சமமாக உண்டு. கடைசி வரிசையில் பரிசு பெறுபவருக்கு மட்டும் கூடுதல் போனஸ் தொகை உண்டு.

மற்ருேர் வகை விநோத லாட்டரி முறையும் ஆஸ்டிரியாவில் இருந்தது. இந்த லாட்டரியில் டிக்கெட்டுகளுக்குக் குறிப்பிட்ட விலை கிடையாது; பரிசும் குலுக்கலுக்குப் பின்னர்தான் எத்தனை என்பது அறிவிக்கப்படும் "கிராக்கிக்கு" ஏற்ப டிக்கெட்டின் விலை கூடும்; குறையும். இந்த லாட்டரியின் வேருேர் நூதன அம்சம் எல்லாச் சீட்டுகளிலும் எண்கள் 1 முதல் 10 வரையே இருக்கும். இதில் எந்த எண்ணுள்ள சீட்டையும் ஒருவர் எவ்வளவு வேண்டுமானலும் வாங்கலாம். மேலுக்கு இப்படி சுவாரசியமில்லாதது போன்று தோன்றினலும், இந்த லாட்டரியில் வெற்றி பெறுவது மிக மிகக் கடினம். ஒருவர் வாங்கியுள்ள சீட்டின் எண் குலுக்கலில் வந்துவிட்டால் மட்டும் அவர் ஜெயித்தவராக மாட்டார். அடுத்து ஐந்து குலுக்கலிலும் எந்த எண்கள் வரும் என்பதையும் அவர் முன் கூட்டியே சொல்லியாக வேண்டும். இந்த விசித்திர லாட்டரியில் 4, 39, 49, 268 பேர்களில் ஒருவர்தான் வெற்றி பெறுகிருர் என்ருல், இதன் கடின நடைமுறை புலப்படும்.

ஆஸ்டிரியாவில் இன்று பாங்குகள் லாட்டரி நடத்துகின்றன. வருடந்தோறும் லாட்டரி மூலம் 19,1‍+2,000 ஷில் வருவாயாகக் கிடைக்கிறது.

பதினைந்தாம் நூற்ருண்டு முதல் லாட்டரி இங்கிலாந்தில் பிரபலமாக இருந்தது. சில தனி நபர்கள் லாட்டரி நடத்தினர். 1569-ஆம் ஆண்டில் இங்கிலாந்தை ஆண்ட எலிஸபெத் அரசியாலேயே அதிகார பூர்வமான லாட்டரி ஏற்படுத்தப்பட்டது. லாட்டரி மூலம் மக்களிடையே சூதாட்ட மனப்பான்மை தலை விரித்தாடியதால் 1825-ல் தடை விதிக்கப்பட்டது. இதன் விளைவுபோல குதிரைப் பந்தயம் தோன்றியது, 1826 ஆம் ஆண்டில்.

இத்தாலி நாட்டில்பணத்திற்குப் பதிலாகப் பொருட்களைப் பரிசாக அளிக்கும் லாட்டரி முறை பதினைந்தாம் நூற்ருண்டு முதல் பதினைரும் நூற்ருண்டு வரை பிரபலமாக இருந்தது. பின்னர் பெருந் தொகையைப் பரிசாகக் கொண்ட லாட்டரி அறிமுகமாகியது. ஹாலந்து நாட்டிலும் இதுபோல பண்டக லாட்டரி நடைபெற்று, பின்னர் பண லாட்டரி அமுலுக்கு வந்தது.

பிரான்ஸ் நாட்டில் "டட்சு" லாட்டரி என்ற பரிசுத் திட்டத்தை முதலில் சில தனி நபர்கள் நடத்தி வந்தனர். பின்னர் ஒரு நிறுவனம் அப்பொறுப்பை ஏற்றது. "டட்சு" லாட்டரி இன்றளவும் உலக நாடுகள் முழுவதும் புகழும் வரவேற்பும்

பெற்றிருக்கிறது. இதன் மூலம் கிட்டும் வருவாய் தரும காரியங்களுக்காகச் செலவிடப்படுகிறது. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு லாட்டரிக்குத் தடை விதிக்கப்பட்டது. பின்னர் நற்பணிகளுக்காக லாட்டரி நடத்தலாம் என்று அறிவிக்கப்பட்டது.

மேற்கு ஜெர்மனியில் பல்வேறு மாநிலங்களிலும் கவர்ச்சிகரமான பரிசுத் தொகைகளைக் கொண்ட லாட்டரிகள் நடத்தப்படுகின்றன. ஹம்பர்க், ஸசக்ஸோனி ஆகிய இரு மாநிலங்களும் தனித்தனியாக லாட்டரி நடத்துகின்றன. எல்லா மாநிலங்களுக்கும் பொதுவான ஒரு மத்திய லாட்டரியும் அங்கே உண்டு. வருடத்திற்கு இரு முறை குலுக்கல் நடைபெறுகிறது. ஒவ்வொரு குலுக்கலுக்கும் 80,000 சீட்டுகள் விற்கப்படுகிறது. 1.4 260,100 மார்க்ஸ் பரிசுத் தொகையாக அளிக்கப்படுகிறது. சீட்டு விற்பனையில் 20·1. "தமாஷாவரி" விதிக்கப்படுவது குறிப்பிடத்தக்க ஒரு அம்சம். வருவாயில் 20 சதவிகிதம் நிர்வாகச் செலவுகளுக்கு ஒதுக்கப்படுகிறது. எஞ்சும் தொகை மாநிலங்களின் வளர்ச்சிப் பணிகளுக்கு உரியது.

அமெரிக்காவிலும் தொன்று தொட்டு லாட்டரிகள் நடத்தப்பட்டு வந்தன. இவற்றை தனி நபர்களும் மாநில அரசுகளும், நடத்தி வந்தன. நியூ யார்க் நகரில் 1776-ல் நடைபெற்ற கன்டினென்டல் காங்கிரஸ்' போர் வீரர்களுக்கு நிதி உதவி செய்வதற்காக ஒரு லாட்டரியை நடத்தியது. தொடக்க காலத்திலிருந்தே அமெரிக்க மக்களில் கணிசமான பேர்கள் லாட்டரியை எதிர்த்தனர். விளைவு? நியூயார்க் மாநிலத்தில தடை விதிக்கப்பட்டது. லாசியானா மாநிலத்தில் தனி நபர்கள் லாட்டரி நடத்தினர். ஊழல்கள் பெருகவே, அதற்கும் தடை விதிக்கப்பட்டது.

இரும்புத் திரை நாடு எனப்படும் ரஷ்யாவிலும்கூட லாட்டரி நடத்தப்படுகிறது என்றால் பலருக்கும் வியப்பாகத்தான் இருக்கும். மாபெரும் புரட்சிக்குப் பின்னர் அங்கு எல்லா லாட்டரிகளுக்கும் சமாதி கட்டப்பட்டது இருப்பினும், தொழிலாளர், விவசாயிகள் நலத் திட்டத்திற்காக அவ்வப்போது உசிதம் போல லாட்டரிகள் நடத்த 1930, ஜனவரி முதல் தேதி முதல் அங்கும் அனுமதி உண்டு

உலகின் பல்வேறு நாடுகளிலும் லாட்டரி நடத்தப்படுவதின் முக்கிய காரணம், நிதி நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் லாட்டரி காமதேனுவைப் போல பணம் பொழிவதுதான். வரி என்றால் முகம் சுளிப்பவர்களிடமிருந்து நோக்காமல் பணம் பறிக்கும் வித்தைக்குப் பெயர்தான் லாட்டரி. 1825-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் தடை செய்யப்பட்ட லாட்டரிக்கு 1918-ஆம் ஆண்டில் "புத்துயிர்" அளிக்கப்பட்டது. உலகப் போரால் விளைந்த நிதிப் பற்றுக்

குறையை ஈடு செய்ய லாட்டரி நடத்துவது அவசியமாயிற்று.

இந்தியாவில் மத்திய அரசு "பரிசுப் பத்திரங்கள்" என்ற நஷ்டமற்ற லாட்டரியை 1960-ல் துவங்கியது. இம்முறையில் பரிசு விழாதவருக்கு ஐந்தாண்டுகளுக்குப் பின் பத்திரத் தொகை திரும்பக் கிடைத்துவிடும். தற்போது ஆக்கப் பணிகளுக்கு நிதி உதவி பெற தமிழக, கேரள, பஞ்சாப், ஹரியானா, மகாராஷ்டிர அரசுகளும், ஒரிஸ்ஸாவில் கே. கி. லாட்டரி என்ற நிறுவனமும் லாட்டரிகள் நடத்துகின்றன.

—"தினமணிசுடர்"

---

[44-ஆம் பக்கத் தொடர்ச்சி]

திலும் இந்தியாவிலும் தென் ஆப்பிரிக்க நிகழ்ச்சிகளின் விளைவுகள் ஏற்பட்டன. இந்தியாவில் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பினால் அச்சமுற்ற வைஸ்ராய் ஹார்டிஞ்ச் பிரபு தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தை வன்மையாகக் குறை கூறினார். விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. இறுதியில் ஜெனரல் ஸ்மட்சுக்கும் காந்திஜிக்கும் இடையே சந்திப்புகள் பல நிகழ்ந்தன. 1914 ஜூன் 30ஆம் தேதி உடன்பாடு ஏற்பட்டது. ஜூலை மாதத்தில் இந்திய கஷ்ட நிவாரண மசோதா இயற்றப்பட்டது.

இந்தியாவில் சட்டப்படி செல்லக் கூடிய திருமணங்கள் அனைத்தும் தென் ஆப்பிரிக்காவிலும் செல்லுபடியாகும் என்று புதிய சட்டம் வகை செய்தது. நேத்தாலில் இருக்க விரும்பிய ஒப்பந்த தொழிலாளர்கள் மீது மூன்று பவுன் வருடாந்திர வரி வசூலையும் நிறுத்தினார்கள். 1920-க்குப் பிறகு ஒப்பந்தத் தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படமாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. கைரேகையுடன் கூடிய சொந்த ஊர் சான்றிதழ் மட்டும் இருந்தால் யூனியனுக்குள் நுழையலாம் என்று விதிமுறை கொண்டு வரப்பட்டது.

இது காந்திஜியின் வெற்றியாக—சத்தியத்தின் வெற்றியாக, அஹிம்சையின் வெற்றியாக—இருந்தது.

தென் ஆப்பிரிக்காவிலிருந்து புறப்படுவதற்கு முன் காந்திஜி ஜெனரல் ஸ்மட்சுக்கு இரண்டு காலணிகளை அன்பளிப்பாக அனுப்பினார். ஸ்மட்ஸ் இவற்றை ஏற்றுக் கொண்டார். பிறகு ஒரு தடவை ஸ்மட்ஸ் குறிப்பிட்டார்: "கோடை நாட்கள் பலவற்றில் நான் இவற்றை அணிந்திருக்கிறேன். இருப்பினும் இவ்வளவு பெரிய மனிதரின் காலணிகளை அணிந்துகொள்ளும் தகுதி எனக்கு இல்லை என்றே கருதுகிறேன்."

—"தினமணி சுடர்"

# மாணவர் திலகம்

"அம்சா?"

"வணக்கம் ஐயா!"

"அம்பா?"

"வணக்கம், ஐயா!"

"லலிதா?"

"வணக்கம், ஐயா!"

"பத்மா?"

"வணக்கம், ஐயா!"

"பாண்டியன்?"

"வணக்கம், ஐயா!"

"மணி?"

"வணக்கம் ஐயா!"

பாண்டியனுக்குப் பிறகு மணியின் பெயர் வருகைப் பதிவேட்டில் இல்லை. மாணுக்கரின் வருகையை வேகமாகப் பதிவு செய்து கொண்டிருந்த ஆசிரியர் ஐயப்பன் நிமிர்ந்து பார்த்தார்.

"மணி! பாண்டியனுக்குப் பிறகு உன் பெயர் இல்லையே...? திருமால் பெயர்தானே இருக்கிறது?"

"மணி. ஸ்பெஷல் ஃபீஸ் கட்டலே, சார்! முப்பதாந் தேதியோடு கடைசி நாள்... இன்றைக்கு முதல் தேதி... அவன் பேரை எடுத்துட்டிருப்பாங்க, சார்!" என்ருன், 'முந்திரிக்கொட்டை' அன்வர் பாஷா.

"அது, நீ சொல்லித்தான் எனக்குத் தெரியணுமோ!" என்று அதட்டிய ஆசிரியர், வருகைப் பதிவேட்டின் தாள்களைத் திருப்பி, முதல் மாத இறுதியில் அவன் பெயர் அடிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தார்.

பிறகு தொடர்ந்து வகுப்பு முழுவதும் வருகைப் பதிவு செய்து முடித்தார்.

மணி வகுப்பில் முதல்வன்; நல்லொழுக்கம் மிகுந்தவன்; வறியவன் ஆனுலும் வளமான அறிவு படைத்தவன். ஆகையால், ஆசிரியரால் அவனைக் கோபித்துக்கொள்ள முடியவில்லை.

---

## தாமரைக்கண்ணன்

---

புத்தகங்களை எடுத்துக்கொண்டு தலையைக் கவிழ்த்தவாறு வகுப்பை விட்டு வெளியேறினுன், மணி.

அவனுக்குத் தெரியும்... இப்போது நேராக வீட்டுக்குப் போனுலும் பணம் கிடைக்காது. பாட்டியும் கூலி வேலைக்குப் போய்விட்டிருப்பாள். விளக்கு வைக்கும் நேரத்துக்குத்தான் திரும்புவாள்.

நேராகப் பள்ளியின் விளையாட்டுத் திடலுக்குச் சென்று, தழைத்து வளர்ந்திருந்த வேப்ப

மரத்தின் நிழலில் ஒரு கல்லின்மீது அமர்ந்தான் மணி.

அவன் ஒரு வாரமாகவே வள்ளிப் பாட்டியை இந்தப் பணத்துக்காக நச்சரித்துக் கொண்டிருந்தான். அவளுக்கும் அவனை மிகவும் நன்ருகப் படிக்க வைக்க வேண்டும் என்று ஆசைதான்! ஆனாலும், பணம் எங்கும் கிடைக்காத சூழ்நிலையில் அவனுடைய நச்சரிப்பைத் தாங்க முடியாமல் அவள் இரண்டு நாட்களுக்கு முன்னால் அவன்மீது எரிந்து விழுந்தாள்.

"போனவ உன்னைப் பெற்று என் தலையிலே கட்டிட்டுப் போயிட்டா. நான் தள்ளாத வயசிலே என் நெஞ்சு எலும்பை ஒடிச்சு உனக்குக் கஞ்சி வார்க்கிறேன். விழத் தகாதவங்க காலிலெல்லாம் விழுந்தாச்சு...இந்தக் காலத்திலே யாரை யார் நம்பிப் பணம் தர்ருங்க? நாம் அன்ருடம் காய்ச்சிங்க. வீடு வாசல் இருக்கிறவங்களையே நம்பிக் கடன் கொடுக்காத இந்தக் காலத்திலே நம்மை நம்பி நாலு காசு யாரு தர்றேன்ருங்க? போ...போ! நீ படிச்சுக் கிழிச்சது போதும். யார் வீட்டுக்காவது படி ஆள் வேலைக்குப் போ. ஒரு நாளைக்குப் பத்துத் தட்டுச் சாணி குழிச்சுக் கொட்டிஞ மாசத்துக்கு ரெண்டு மரக்கா நெல்லாவது எந்த மவராசனுவது படி கொடுப்பான்!"

ஏதோ, கிழவி தொல்லை தாங்காமல் சொல்லிவிட்டாளே தவிர, அவனுக்குப் பணம் தர முடியவில்லையேயென்று அவள் அன்றிரவெல்லாம் நெஞ்சம் குமுறி அழுது வேதனைப்பட்டது அவனுக்குத் தெரியும்.

அதன் பிறகு அவன் அவளிடம் காசு கேட்கவில்லை; எங்கெங்கேயோ முயன்று கொண்டிருக்கிருள்....கிடைத்தால் கொடுப்பாள் என்று பேசாமல் இருந்துவிட்டான். கடைசியில் இந்த நிலைக்கு ஆளாகிவிட்டான்.

மணியின் சொந்த ஊர் உத்தமனூர். அவன் படிக்கும் அச்சிறுபாக்கத்திலிருந்து மேற்கே இரண்டரை கல் தூரம். வீட்டுக்குப் போனால், அன்று நடந்த பாடங்களை யாராவது பையன்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள மறுபடியும் அச்சிறுபாக்கத்துக்கு வருவது சிரமம்.

ஆகவே மாலையில் பள்ளி முடியும்வரை அங்கேயே இருந்தான். நண்பன் ஒருவனைச் சந்தித்து அவன் கொடுத்த நோட்சுகளையெல்லாம் எழுதிக்கொண்டு ஐந்து மணிச் சங்கு பிடிக்கும்போது வீட்டுக்குப் புறப்பட்டான்.

'நாளைக்குப் பணத்துக்கு என்ன செய்வது? பாட்டியால்கூடக் கொடுக்க முடியாது...படிப்பதற்கு வழியில்லாமல் போய்விடுமோ?' என்ற கவலையும் வேதனையும் முகத்தில் முத்திரையிடத் தலை குனிந்தவாறு விளையாட்டுத் திடலை அவன் கடந்து கொண்டிருந்த போது—

அவன் சற்றும் எதிர்பாராதவித மாக ஒரு தங்க மோதிரம் அவனுடைய காலடியில் மிதிபட்டது.

அதைக் கையில் எடுத்துப் பார்த்தபோது அவன் உடலும் உள்ளமும் குறுகுறுத்தன.

'இது யாருடையதாக இருக்கும்? விளையாட்டுத் திடலில் ஒருவரைக்கூடக் காணலையே...'

சுற்றுமுற்றும் பார்த்துத் தயங்கிய அவன் தலைமையாசிரியரைத் தேடி அவர் அறைக்குச் சென்றான். அவர் இல்லை. அலுவலகமும் மூடப்பட்டிருந்தது.

மோதிரத்தைப் பத்திரமாக ஒரு காகிதத்தில் மடித்து எடுத்துக் கொண்டு உத்தமனூர் வந்து சேர்ந்தான் மணி.

அவன் வீட்டை அடைந்தபோது விளக்கு வைத்துவிட்டது.

பாட்டி கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தாள். பேரனின் துன்பம் தோய்ந்த முகத்தைப் பார்த்துக் கலக்கத்துடன், "ஏண்டா, கொழந்தே! பள்ளிக்கூடத்திலே என்ன ஆச்சு?" என்று கேட்டாள்.

"பணம் கட்டலேன்னு என் பேரை எடுத்துட்டாங்க, பாட்டி!"

"எப்படியோ ஏழாவது வரைக்கும் உன்னைப் படிக்க வச்சுட்டேன். உன் தலையெழுத்து... நான் ஒருத்தி கல்லாட்டமா இருந்தும் உன்னை அதுக்குமேலே படிக்கவைக்க முடியல்லையேடா, கண்ணு..."

பாட்டி நெஞ்சம் குமைந்தாள்.

"அது இருக்கட்டும், பாட்டி! இதைப் பாரேன்..."

மோதிரத்தை அவளிடம் எடுத்துக் காட்டினான் மணி. அந்த மோதிரத்தின் கற்கள் காடா விளக்கின் வெளிச்சத்தில் ஒளி வீசின.

"ஏதுடா கொழந்தே, இது...?" கிழவி மிரண்டாள்.

"விளையாட்டு மைதானத்தில் கிடந்தது, பாட்டி!"

ஒரு கணம் எதையோ எண்ணிய வள்ளிப்பாட்டி, "கடவுளா நம்ம கஷ்டத்தைப் பார்த்து இதை உன் கண்ணிலே படச் செய்திருக்காரு. வித்தாக்கா அம்பது அறுபது ருபாயாவது தேறும். நீயும்தான் உடுத்தத் துணியில்லாமெ கஷ்டப் படறியே...ரெண்டு கால் சட்டையும் ரெண்டு சொக்காயும் தச்சுக்கோ! முதல்லே பள்ளிக்கூடத்திலே பணம் கட்டிடு. மானம் காஞ்சுபோன இந்த நாளிலே கூலி வேலையும் கிடைக்கலே. நமக்கும் ஒரு மாசம் கஞ்சித் தண்ணிக்குக் கவலையில்லே...என்னப்பா, நான் சொல்லறது சரிதானே...?" என்று சொல்லிக்கொண்டே அடுப்பு நெருப்பை ஏறத் தள்ளினாள்.

"பாட்டி...!" என்று வீரிட்ட மணி, அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பி விளக்கு வெளிச்சத்தில் பார்த்தான். அவன் கண்கள் கலங்கின.

"நீ உண்மையாகத்தான் சொல்றியா, பாட்டி? என்னை ஒழுக்கமுள்ளவனா வளர்த்த நீயே, இவ்வளவு மோசமாப் பேசுவேன்னு நான் நினைக்கவேயில்லே, பாட்டி!" என்று வருத்தத்துடன் கூறினான்.

"என் தங்கக் கட்டிடா கொழுந்தே, நீ! உன்னைச் சோதிக்கிறதுக்குத்தான் அப்படிச் சொன்னேன். மணி! நமக்கு எவ்வளவு வறுமை வந்தாலும் பிறத்தியார் பொருளுக்கு நாம் ஆசைப்படக் கூடாதுடா. நாம் அஞ்சு காசுக்கு ஆசைப்பட்டா நமக்கு அம்பது காசுக் கெட்ட பேர் வந்து சேரும். மாடு மேய்ச்சுத் தண்ணி குடிச்சாலும் குடிக்கலாம்; மானங்கெட்டுப் போய் மத்தவங்க சொத்துக்கு ஆசைப்படக் கூடாது!" என்று சொல்லி அவனை அணைத்துக் கொண்டாள்.

மறுநாள் காலை...

பள்ளிக்கூடத்தில் வழிபாட்டுக் கூட்டத்தில் மாணுக்கர் வரிசை வரிசையாக வந்து நின்றுர்கள்.

இறை வணக்கம், குறள் விளக்கம், உறுதிமொழி முதலியவை நடந்தேறின.

மணியை அழைத்துக்கொண்டு அறிவிப்பு மேடைக்கு வந்தார், தலைமையாசிரியர்.

அவன் கொண்டு வந்து கொடுத்த மோதிரத்தை மாணுக்கர் அனைவருக்கும் காட்டி, "விளையாட்டு மைதானத்தில் கிடைத்த இந்தத் தங்க மோதிரத்தை அவன் யாருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டிருக்கலாம். படிப்பதற்குப் பணம் கட்ட முடியாத அவ்வளவு வறிய நிலையிலும் அவன் நேர்மையாக நடந்துகொண்டதை எவ்வளவு பாராட்டினுலும் தகும். மாணவர்களுக்குப் படிப்பறிவு மட்டும் போதாது... ஆழ்ந்த நுண்ணறிவும் உயர் பண்பும் பெருந்தன்மையும் தேவை என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறுன் நம் மணி!" என்று பாராட்டினுர் தலைமை யாசிரியர்.

அவனுடைய நல்லொழுக்கத்தை மெச்சி அவன் உயர்நிலைப் பள்ளி படிப்பு முடிக்கும்வரையில் தலைமையாசிரியரே அவனுக்குரிய பள்ளிக் கட்டணங்களைக் கட்டுவதாக ஏற்றுக்கொண்டார்.

அப்போதே தமது விலையுயர்ந்த பேனுவை எடுத்து அவனுக்குப் பரிசளித்தார் வகுப்பாசிரியர் ஐயப்பன்.

—நன்றி: "கண்ணன்"

---

கருத்துச் சரம்:

# மனச்சான்று

❊

மனச் சான்று பற்றித் தனித்திருந்து உணராதவன் மனச் சான்று என்ன என்பதை அறியான்.

—ஜோசப் குக்' விரிவுரையாளர்.

உலகம் மனச் சான்று இல்லாத ஒண்மதி படைத்துள்ளது. அணுவிசைத் துறையில் ஓங்கிவளர்ந்த வல்லவர்களும் அறநெறித் துறையில் பச்சிளம் பாலகர்களும் உள்ள உலகம் இது.

—ஓமார் என் பிராட்லி, அமெரிக்கத் தளபதி

பாரபட்சம் இல்லாத மனச்சான்று உரிமை எல்லாருக்கும் உரிய இயல்பான உரிமைகளுள் ஒன்று...சமய நெறியைக் கடைப்பிடிப்பதற்கு முதலில் வேண்டுவது மனச்சான்று உரிமை.

வில்லியம் பென், பென்ஸில்வேனியா மாநிலத்தை நிறுவியவர்.

இந்தக் கமிஷனுக்கு முக்கியமாகத் தோன்றிய அடிப்படை உரிமைகள் நான்கு: இவற்றைக் கருத்தில் கொண்டே கமிஷன் தன் பணிகளைச் செய்துள்ளது :-

தனி நபர் என்ற முறையில் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதற்கான உரிமை.

சம வாய்ப்புப் பெறுவதற்கான உரிமை.

நாட்டுக் குடிமக்கள் என்ற நிலைமைக்கும் அதனால் வரும் வசதிகளுக்குமான உரிமை

மனச்சான்று சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம் இவற்றுக்கான உரிமை.

—அதிபர் ட்ரூமன்

—1947-ல் குடியுரிமைகள் பற்றிய அதிபர் கமிஷன்

# எதிர்பாராத விபத்துகள்

— ஆக்னஸ். ஆர். என். —

சட்டென்று வீட்டிலே ஆபத்தோ நோய் நொடியோ வந்துவிட்டால் என்ன செய்வது? எதெது எப்பொழுது வருமென்று தெரிந்தால் தானே, சொல்லி வைத்தாற் போல, வரவேற்பு அளிக்கத் தயாராக இருப்பீர்கள்? திடுதிப்பென்று ஏதாவது நேரும்போது, உங்களால் என்ன செய்ய முடியும்?

## 1. வயிற்று வலி

இருந்தாற் போலிருந்து குழந்தைக்குத் திடீரென்று வயிற்றை வலிக்கிறது. சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்று வலி உண்டாகும். அதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். அதிகமாகச் சாப்பிட்டுவிடுவது. அதிகச் சத்தான உணவு, பரபரப்பு அடைவது, இப்படி எத்தனையோ!

எதற்கும் குழந்தையை உடனே படுக்கையில் போடுங்கள். குப்புறப் படுத்து, கொஞ்ச நேரம் அமைதியாக இருக்கட்டும். அநேகமாக வலி சிறிது நேரத்தில் நீங்கிவிடும். அல்லது குழந்தை வாந்தி யெடுத்தாவது குடல் காலியாகிவிடும். அப்படியும் வலி சீக்கிரம் நீங்காமல், அடிவயிற்றின் வலது பக்கம் அதிகமாக வலித்தால், அது ஒருவேளை அப்பென்டிஸைட்டிஸ் என்ற குடல் வாலழற்சி நோயாக இருக்கும். எல்லாவற்றிற்கும் தான் விளக்கெண்ணெய் கொடுக்கலாமே என்று யோசித்து விடாதேயுங்கள். சில சமயங்களில் அது ஆபத்தாகி விடும். டாக்டர் வந்து பார்க்குமளவும், தண்ணீர் மாத்திரம் கொடுங்கள். வேறு ஒன்றும் கொடுக்கவே கூடாது.

## 2. திடீரென்று மூக்கிலிருந்து இரத்தம் வழிந்தால்

தண்ணீர்ப் பாத்திரத்துக்குப் பக்கத்தில் குனிந்து, கீழே பார்த்துத் தலையை வைத்துக்கொண்டிராமல், தலையை உயரத் தூக்கி மேலேயே பார்த்துக்கொண்டிருக்கட்டும். கழுத்தைச் சுற்றி சட்டை அல்லது துணி இருந்தால், அதைத் தளர்த்திவிடுங்கள். ஐஸ் ஜலம் நனைத்து மூக்கின் மேலும், கழுத்தின் பின்பக்கத்திலும் குளிர்ந்த தண்ணீர் ஒத்தடம் கொடுங்கள். மூக்கைச் சிந்துவது கூடாது.

## 3. கண்ணில் மணல் விழுந்து விட்டால்

பிள்ளை கண்ணை நன்றாக அழுந்தத் தேய்த்து விடாதபடி சட்டென்று கண்ணைக் கழுவுங்கள். கழுவுவதற்கு வென்னீர் இளஞ்சூடாக உபயோகிக்க வேண்டும். தண்ணீரை மெதுவாகக் கண்ணின் உட் பாகத்தில் படத் தக்கதாகச்

செலுத்தி வெளியேற்ற வேண்டும். தண்ணீரைத் தாராளமாக உபயோகியுங்கள். இமை யோரத்தில் அல்லது கண்ணின் வெள்ளையான உருண்டைப் பாகத்தில் மணல் ஒதுங்குகிறதாவென்று பாருங்கள்.

## 4. மூக்கு அல்லது காதில் ஏதாவது பொருட்கள் அடைத்துக்கொண்டால்

வேறுயாராவது இதைஎடுக்க பிரயாசப்படுவதைவிட மேல் காதிலே இளஞ் சூடான ஆலிவ் எண்ணெய் அல்லது மினரல் எண்ணெய் சில சொட்டுகள் விடலாம். பூச்சிகள், ஈக்கள் உள்ளே போயிருந்தால், அவை இறந்து விடுகின்றன. அவரை விதை, சோள விதை முதலானவை உள்ளே போய்விடலாம். வீக்கம் வராதபடி தடுப்பதற்கு சில சொட்டுகள் காதில் ஊற்றுவது மிகவும் நல்லது.

## 5. மூர்ச்சை போட்டு விழுதல்

பாதையிலோ பஸ்ஸ்டாண்டிலோ ஆலயம் போன்ற பொது இடங்களிலோ நமக்குத் தெரிந்தவரோ தெரியாதவரோ ஒருவர் திடீரென்று மூர்ச்சையாகி விட்டால், என்ன செய்வது ? இது மிகவும் சாதாரணமாக நடக்கக் கூடியது. அரை மயக்கமாக இருந்தால் கைகளையும் கால்களையும் ஊன்றி, தலையைக் கீழே முழங்கால்களுக்கிடையில் வைத்துக்கொள்ளச் செய்யலாம். கழுத்தையும் மார்பையும் சுற்றி இருக்கும் துணிகளைத் தளர்த்தி விடுங்கள். முழுவதுமாக மயக்கம் அடைந்திருந்தால், படுக்கையில் முகங்குப்புற படுக்க வைத்து கால்களை, உடலின் கீழ்ப்பாகத்தை சற்றே உயர்த்துங்கள். துணிகளைத் தளர்த்துங்கள். மூளைக்கு இரத்தம் செல்லத் தக்கதாக முகத்தில் தண்ணீர் தெளிக்க வேண்டும். தண்ணீரை முகத்தில் பலமாக அடிக்கக் கூடாது. அது சுவாச ஓட்டத்தைப் பாதிக்கும். அம்மோனியா காஸ் அல்லது சுவாச உப்புகளை உபயோகிப்பது பலனைத் தரும். எதற்கும் இவற்றை மிகவும் கவனமாகவே உபயோகிக்க வேண்டும். மூக்குக்கு மிகவும் சமீபத்தில் கொண்டுவர வேண்டாம். அம்மோனியா காஸ் அதிகமாகச் சேருவது சுவாச ஓட்டத்திற்குக் கெடுதி.

உணர்வு வந்தவுடன், சூடாக ஏதாவது கொடுப்பது நல்லது.

## 6. வலிப்பு

திடீரென்று ஒருவர் கூச்சலிட்டுக்கொண்டு, கண்முழி தள்ளி உடலும் விறைத்துக் கொள்வது போலாகி விழுந்து விடுகிறார். மறு

படி சரியாகி விடுகிறார். மறுபடியும் வலிப்பு வருகிறது. அப்போது செய்யவேண்டியது இதுதான்.

தலையை இலேசாக உயர்த்தி, மல்லாந்து படுத்துக்கொள்ளும்படி வையுங்கள். தமது நாக்கை நோயாளி தாமே கடித்துக் காயமாகி விடாதபடி, ஒரு கைக்குட்டையை மடித்து, அல்லது பென்சில், பேப்பர் எதையாவது பற்களுக்கிடையில் கொடுங்கள். வலிப்பதைத் தடுக்க, நிறுத்த, பிடித்துவைத்துக் கொள்ளாதிருங்கள். அநேகமாக காக்காய் வலிப்பாக இருக்கலாம். சில நிமிஷங்கள் மட்டுமே இருக்கும். நல்ல சுத்தமான காற்று உட்கொள்ளும்படி, ஜன்னல்களைத் திறந்து காற்றை அறையில் வீசுவதற்கு, அல்லது கூட்டத்தை ஒதுங்கி நிற்க வைக்க முயற்சி செய்யுங்கள். சூடானபானம் எதுவும் கொடுக்கக் கூடாது. சாதாரணமாக சற்று நேரத்தில் பிணியாளி தூங்கிவிடுவார். அவரை எழுப்பாதிருங்கள்.

## 7. குழந்தை விரலை வெட்டிக் கொண்டால்

வெட்டு ஆழமாக இருந்தால் சுத்தமான துணியினால் சுற்றிவிட்டு உங்கள் வைத்தியரிடம் அழைத்துச் செல்லுங்கள். லேசான காயமானால், இளஞ் சூடுள்ள நீரில் கழுவிச் சுத்தமாகப் பாண்டேஜ் போடுங்கள்.

## 8. கொதிக்கும் தண்ணீர் மேலே கொட்டினால்

உடலில் வெந்து போன பாகத்தின் மேலே இருக்கும் துணியை உடனே அகற்றுங்கள். ஒரு சுத்தமான, தடிப்பமான துணியைப் பல மடிப்புகளாக மடித்து, மூன்று மேஜை கரண்டி சமையல் சோடா உப்பை $\frac{3}{4}$ காலன் தண்ணீரில் நனைத்துக்கொள்ளுங்கள். கொதிக்கும் தண்ணீரில் நனைத்து, உப்பு சேர்ப்பது நல்லது. வாசலீன், வெண்ணெய், கடலை எண்ணெய், ஏதாவது தீப்புண்களுக்குப் போட உதவுகிற களிம்பைத் துணியில் தடவி, பிறகு சுற்றிக் கட்டுங்கள்.

—“நல்வழி”

**மனச்சான்று**

அரசாங்கம் தன்னுடையனவாகக் கொள்ளும் மனச்சான்று, வழிபாடு இவற்றுக்கு வேறான மனச்சான்றுகளும் வழிபாடுகளும் இருக்க விடுவது ஒன்றே (கடவுள் திருவுளப்படி) உறுதியான நிலையான அமைதியைக் கொணரும்.

**—ரோஜர் வில்லியம்ஸ், ரோடு ஐலண்டு மாநிலத்தை நிறுவியவர்.**

கிளர்ச்சி மொழிகள் பரபரப்பூட்டும், ஆறுதல் அளிக்கும்; ஆனால் அவை மனச்சான்றை மறக்கடிக்கும்; வேகம் மிகுந்த போதைப்பொருள்களுமாகும்.

**—ஜேம்ஸ் பிரையன்ட் கானன்ட், விஞ்ஞானி, கல்வியறிஞர்.**

இந் நிலவுலகில் இன்பத்துக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. மனச்சான்று மாசில்லாமல் இருக்க வேண்டும்; அல்லது மனச் சான்றே இல்லாமல் இருக்கவேண்டும்.

**—ஆக்டன் நாஷ், நகைச்சுவையாளர்.**


# புதுமுறை சங்க வாய்பாடு

**V. K. சேஷாத்திரி, B.A., L.T.**

**( Retired Deputy Inspector of schools. )**

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-10 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

# கல்வித்துறை அறிவிப்புகள்

1960 ஆம் ஆண்டு அரசு ஊழியர் விதிகளில் ஜூலை 1964 விலும் எப்ரல் 1966 விலும் சில சலுகைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஓய்வு ஊதிய சலுகைகள் தனியார், உள்ளாட்சி நிர்வாகப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

1. எந்தக்காலம் வரை ஓய்வு ஊதியம் நீடிக்கும்.

2. குடும்ப ஓய்வு ஊதியம் பெற ஆசிரியர் ஊழிய காலம் எவ்வளவு இருக்கவேண்டும்.

3. பணிக்கொடை (Gratuity) யிலிருந்து பிடித்துக் கொள்ளப்படும் தொகை. இதனால் ஆசிரியர் ஓய்வு ஊதியம் பெறவும் அவர் இறந்துவிடின் அவரது (குடும்பம்) மனைவி அல்லது மக்கள் ஊதியம் பெறவும் வாய்ப்புள்ளது. 1-4-69 முதல் இந்த அரசாணை அமுல் நடத்தப்படும்.

அச்சலுகைகள் பின்வருமாறு :

இறக்கும்வரை (அல்லது) விதவை மறுமணம் செய்யும் வரை - எது முன்னதோ அதுவரை ; மக்கள் பொறுப்பேற்கத்தக்க வயதடையும் வரை அல்லது பெண்களானால் திருமணம் ஆகும் நாள் வரை அது முன்னதாக இருப்பின்.

5. ஆண்டுகள்.

ஆசிரியர் பாதுகாப்பு நிதியிலிருந்து இரண்டு மாதச் சம்பளம் பிடிக்கப்படும்.

அரசு ஆணை எண். எம். எஸ். 380 (கல்வி) தேதி 9—4—69

(தமிழகக் கல்வி)

Phone : 24544 Post Box No. 1818

# Association Publishing House

'ஆரம்பக் கல்வி' நிலையம்

94/95, New Street, Mannady, Madras-1.

## ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

### இரண்டாம் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| *சிறுவர் வரலாறு* | *0·50* | — | — |
| *சிறுவர் பூகோளம்* | *0·60* | — | — |
| *சிறுவர் கணக்கு நூல்* | *0·75* | — | — |
| *இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்* | *0·40* | — | -- |

### மூன்றும் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| *சிறுவர் வரலாறு* | *0·60* | — | — |
| *சிறுவர் பூகோளம்* | *0·60* | — | — |
| *சிறுவர் கணக்கு நூல்* | *0·87* | *37* | *18—5—66* |
| *இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்* | *0·50* | — | — |

*(3-வது பூகோளம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)*

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|

## நான்காம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·87 | 11 | 18—5—66 |
| சிறுவர் பூகோளம் | 0·62 | 18 | 19—5—66 |
| சிறுவர் கணக்கு நூல் | 1·25 | 3 | 24—5—67 |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·75 | 6 | 18—5—66 |

(4-வது பூகோளம், சரித்திரம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

## ஐந்தாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 1·00 | 42 | 18—5—66 |
| சிறுவர் பூகோளம் | 1·00 | 19 | 18—5—66 |
| சிறுவர் கணக்கு நூல் | 1·50 | 4 | 17—5—67 |
| சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம் | 1·25 | 9 | 18—5—66 |

# உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

## ஆறும் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| மாணவர் வரலாறு | 1·00 | 54 | 18—5—66 |
| புதுமுறை நில நூல் | 2·00 | 13 | 24—4—68 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| புதுமுறை சங்கக் கணிதம் | 1·50 | 50 | 18—5—66 |
| பொது விஞ்ஞானம் | 1·25 | 25 | 18—5—66 |
| அறிவுச்சுடர் (தமிழ் துணைப்பாட நூல்) | 0·62 | 22 | 18—5—66 |
| Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்) | 0·50 | 49 | 18—5—66 |

ஏழாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| புதுமுறை வரலாறு | 1·50 | 18 | 17—5—67 |
| புதுமுறை நில நூல் | 1·50 | 4 | 24—5—67 |
| புதுமுறை சங்கக் கணிதம் | 1·75 | 4 | 24—5—67 |
| பொது விஞ்ஞானம் | 1·50 | 15 | 17—5—67 |
| மேனாட்டு இளைஞர் (தமிழ்த் துணைப்பாட நூல்) | 1·00 | 7 | 17—5—67 |
| Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்) | 0·60 | 9 | 17—5—67 |

எட்டாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| புதுமுறை வரலாறு | 1·80 | 36 | 17—5—67 |
| புதுமுறை நில நூல் | 1·80 | 40 | 17—5—67 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| புதுமுறை சங்கக் கணிதம் | 2·00 | 4 | 24—5—67 |
| பொது விஞ்ஞானம் | 2·00 | 4 | 24—5—67 |
| நம் நாட்டு இளைஞர் தமிழ்த் துணைப்பாட நூல் | 1·00 | 7 | 24—4—68 |

## கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர் : லீலா. பார்த்தசாரதி, பி.ஏ., எல்.டி.,

| | | | |
|---|---|---|---|
| | 2·00 | 2 | 5-7-'61 |

(ஆசிரியர்களுக்குத் தக்க கமிஷன் உண்டு.)

Association English Primer III Class 0·60
Association English guide IV Class 0·40
Association English guide V Class 0·50

## புதுமுறை சங்க வாய்பாடு

100 பிரதிகள் 9·00

## HIGH SCHOOLS

உயர்நிலைப் பள்ளிகளுக்கு

## GENERAL SCIENCE

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 1·75 | 33 | 18-5-'66 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·00 | 56 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·80 | 23 | 24-4-'68 |

## MATHEMATICS

### புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி..

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·50 | 6 | 24-5-'67 |

### புதுமுறை நிலநூல்

ஆசிரியர் : **R. பத்மநாபன்,** எம்,ஏ., பி.டி.,

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 2·00 | 33 | 7-5-'69 |
| பத்தாம் வகுப்பு | 2·50 | 60 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 3·00 | 28 | 24-4-'68 |

### புதுமுறை வரலாறு

ஆசிரியர் : **வி. எஸ். இராகவன்,** பி.ஏ., பி.டி.,

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 2·00 | 83 | 7-5-'69 |
| பத்தாம் வகுப்பு | 2·00 | 59 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·50 | 24 | 24-4-'68 |

### திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்கள் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.,
புலவர் **தணிகை உலகநாதன்**

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·25 | 45 | 17-5-'67 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|

## TAMIL GRAMMER

### இலக்கணம், கட்டுரை, மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

| | | | |
|---|---|---|---|
| *ஒன்பதாம் வகுப்பு* | *2·00* | *28* | *7-5-'69* |
| *பத்தாம் வகுப்பு* | *2 00* | *5* | *24-5-'67* |
| *பதினோராம் வகுப்பு* | *2·00* | *20* | *25-4-'68* |

## தமிழ்த் துணைப்பாட நூல்

### உரிமைக் குரல்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

| | | | |
|---|---|---|---|
| *ஒன்பதாம் வகுப்பு* | *1·25* | *28* | *7-5-'69* |

### மருத்துவ மேதைகள்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

பதிப்பாசிரியர் : புலவர். தணிகை உலகநாதன்

| | | | |
|---|---|---|---|
| *பத்தாம் வகுப்பு* | *1·25* | *49* | *17-5-'67* |

### உமாபதி உரை நூல்

| | | | |
|---|---|---|---|
| *மூன்றும் வகுப்பு* | *0·45* | — | — |
| *நான்காம் வகுப்பு* | *0·55* | — | — |
| *ஐந்தாம் வகுப்பு* | *0·65* | — | — |
| *ஆறும் வகுப்பு* | *1·00* | — | — |
| *ஏழாம் வகுப்பு* | *1·25* | — | — |

## அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

(*ஆரம்பக்கல்வி நிலையம்*)

94/95, புதுத் தெரு. மண்ணடி, சென்னை-1.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.